வாழ்க்கையும் வழிபாடும்

* * *

- அ. வெ. வெங்கடாசலம் செட்டியார்

பொன்முடி பதிப்பகம் ★ காரைக்குடி

வாழ்க்கையும் வழிபாடும்

வெ. வெங்கடாசலம் செட்டியார்
தேவகோட்டை.


பொன்முடி பதிப்பகம்
காரைக்குடி.

போன் : 2124

பொன்முடி : 131
உரிமை : பதிப்பகத்திற்கு
முதற்பதிப்பு : 1992 ஜுலை

விலை ரூ 10

(நூலாசிரியர் திரு. அ. வெ. வெங்கடாசலம் செட்டியார் அவர்களின்பேரனும்திரு.செந்தில்நாதன் செட்டியார் மகனும் ஆகிய சங்கர்–கமலா திருமணம் 13-7-1992 அன்று தேவகோட்டையில் சிறப்பாக நிகழ்ந்த பொழுது திருமண வாழ்த்தரங்கில் இந்நூல் வெளியிடப் பெற்றது)



நூலாசிரியர் திரு வெங்கடாசலம் செட்டியாரும் அவரது மனைவியாரும்

Publishers :
Ponmudi Pathippagam
123, Muthupatnam IIIst Karaikudi P. M. Dt
Tamil Nadu 623 001 Phone: 2124

அச்சிட்டோர்: மகாலெட்சுமி. தேவகோட்டை. Ph: 2428

3-1

முன்னுரை

நான் ஒரு புத்தகம் வெளியிட நினைத்தேன். திருஞானசம்பந்தர் பதிகங்கள் சிலவற்றைப் படித்தால் மறு பிறவி இருக்காது. என்று அவர் ஆணையிட்டுக் கூறியிருக் கிறார். அப்பதிகங்கள் சிலவற்றை நான் தினசரி படித்து வருகிறேன். மற்ற அன்பர்களும் அவைகளைப் படித்துப் பயனடையப் புத்தகமாகப் பதிப்பிக்க நினைத்து பொற்கிழிக் கவிஞர் திரு அரு சோமசுந்தரம் அவர்களிடம் காட்டினேன் அவர்கள் அதைப் பார்த்து ஒப்புதல் அளித்ததோடு அதில் என்வாழ்க்கைக் குறிப்பையும் சேர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் அதைச் சேர்ப்பதற்கு எனக்கு தயக்கமாக இருக்கிறது. காரணம் நான் பெரிய கல்வி அறிவு உள்ளவன் அல்லன்; தவிர பொது வாழ்வில் ஈடு பட்டவனுமல்லன்; நான் பதிப்பிக்கும் புத்தகத்தைப் படிப்ப வர்கள் என் வாழ்க்கைக் குறிப்பிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டியது எதுவும் இருக்காது. தவிர எனது வாழ்க்கை குறிப்பை அதில் சேர்த்தால் புத்தகம் பெரிதாகிவிடும். அந்தப் புத்தகம் சுருக்கமான நேரத்தில் படிக்க ஏதுவாய் இருக்க வேண்டும் என்பது என் நோக்கம். இக்காரணங்களால் என் வாழ்க்கை குறிப்பை அதில் சேர்க்க விரும்பவில்லை. இருந்தாலும் பொற்கிழிக் கவிஞர் அவர்கள் சொன்னதி லிருந்து எனக்கு வேறொரு எண்ணம் தோன்றியது. எனது சந்ததியார் காலப் போக்காகப் படிக்க ஏது வாயிருக்கும் என்று நினைத்து எனது வாழ்க்கைக் குறிப்பை எழுதுகிறேன் பெரும்பாலும் ஞாபகத்திலிருந்துதான் எழுது கிறேன். ஆனால் நிகழ்ச்சிகள் உண்மை. இதுயாருக்காவது பயன்பட்டால் மிகவும் மகிழ்ச்சி அடைவேன்.

அன்புள்ள,

தேவகோட்டை.
15—1—1992 } A. V. வெங்கடாசலம் செட்டியார்



நூலாசிரியரின் தாயார்

திருஞான சம்பந்தர் அருளிய
தேவாரம்
திருப்புள்ளிருக்கு வேளூர்

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானா ருறையுமிடந்
தள்ளாயசம் பாதிசடா யென்பார்தா மிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே

தையலா ளொருபாகஞ் சடைமேலா ளவளோடும்
ஐயந்தேர்ந் துழல்வாரோ ரந்தணனா ருறையுமிடம்
மெய்சொல்லா விராவணனை மேலோடி யீடழித்துப்
பொய்சொல்லா துயிர்போனான் புள்ளிருக்கு வேளூரே

வாசநலஞ் செய்திமையோர் நாடோறு மலர்தூவ
ஈசனெம் பெருமானா ரினிதாக வுறையுமிடம்
யோசனைபோய்ப் பூக்கொணர்ந்தங் கொருநாளு மொழியாமே
பூசனைசெய் தினிதிருந்தான் புள்ளிருக்கு வேளூரே

மாகாயம் பெரியதொரு மானுரிதோ லுடையாடை
ஏகாய மிட்டுகந்த வெரியாடி யுறையுமிடம்
ஆகாயந் தேரோடு மிராவணனை யமரின்கண்
போகாமே பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே

கீதத்தை மிகப்பாடு மடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே

திறங்கொண்ட வடியார்மேற் றீவினைநோய் வாராமே
அறங்கொண்டு சிவதன்ம முரைத்தபிரா னமருமிடம்
மறங்கொண்டங் கிராவணறன் வலிகருதி வந்தானைப்
புறங்கண்ட சடாயென்பான் புள்ளிருக்கு வேளூரே

அத்தியினீருரி முடியழகாக அனலேந்திப்
பித்தரைப் போற்பலித்திரியும் பெருமானார் பேணுமிடம்
பத்தியினால் வழிபட்டுப் பலகாலந் தவஞ்செய்து
புத்தியொன்றவைத்து கந்தான் புள்ளிருக்கு வேளூரே

பண்ணொன்ற இசைபாடு மடியார்கள் குடியாக
மண்ணின்றின் விண் கொடுக்கு மணிகண்டன் மருவுமிடம்
எண்ணின்றி முக்கோடி வாணாள துடையானைப்
புண்ணொன்றப் பொருதழித்தான் புள்ளிருக்குவேளூரே

வேதித்தார் புரமூன்றும் வெங்கணையால் வெந்தவியச்
சாதித்தவில்லாளி கண்ணாளன் சாருமிடம்
ஆதித்தன் மகனென்னவகன் ஞாலத்தவரோடும்
போதித்தசடாயென்பான் புள்ளிருக்கு வேளூரே

கடுத்துவருங் கங்கைதனைக் கமழ்சடையொன்றாமே
தடுத்தவரெம் பெருமானார் தாமினிதாயுறையுமிடம்
விடைத்துவருமிலங்கைக் கோன்மலங்கச் சென்றிராமற்காய்ப்
புடைத்தவனைப் பொருதழித்தான் புள்ளிருக்குவேளூரே

செடியாயவுடறீர்ப்பான் றீவினைக்கோர் மருந்தாவான்
பொடியாடிக்கடிமை செய்த புள்ளிருக்குவேளூரைக்
கடியார்ந்த பொழிற்காழிக் கவுணியன் சம்பந்தன்சொல்
மடியாது சொல்லவல்லார்க் கில்லையா மறுபிறப்பே,

திருவெண்காடு

மந்திர மறையவை வானவரொடும்
இந்திரன் வழிபட நின்ற வெம்மிறை
வெந்த வெண்ணீற்றர் வெண்காடுமேவிய
அந்த முழுதலுடை யடிகளல்லரே 1

படையுடை மழுவினர் பாய்புலித்தோலின்
உடைவிரி கோவண முகந்தகொள்கையர்
விடையுடைக் கொடியர் வெண்காடுமேவிய
சடையிடைப்புனல் வைத்த சதுரரல்லரே 2

பாலொடு நெய்தயிர் பலவுமாடுவர்
தோலொடு நூலிழை துதைத்தமார்பினர்
மேலவர் பரவு வெண்காடுமேவிய
ஆலமதமர்ந்த வெம்மடிக ளல்லரே, 3

ஞாழலுஞ் செருந்தியு நறுமலர்ப் புன்னையுந்
தாழைவெண் குருகயறங்கு கானலில்
வேழமதுரித்த வெண்காடு மேவிய
யாழன திசையுடை கிறைவரல்லரே 4

பூதங்கள் பலவுடைப்புனிதர் புண்ணியர்
ஏதங்கள் பலவிடர்தீர்க்கு மெம்மிறை
வேதங்கண் முதல்வர் வெண்காடுமேவிய
பாதங்கள் தொழநின்ற பரமரல்லரே 5

மண்ணவர் விண்ணவர் வணங்கவைகலும்
எண்ணிய தேவர்களிறைஞ்சு மெம்மிறை
விண்ணமர் பொழில்கொள் வெண்காடுமேவிய
அண்ணலையடி தொழவல்ல வில்லையே

நயந்தவர்க்கருள் பலநல்கி இந்திரன்
கயந்திரம் வழிபடநின்ற கண்ணுதல்
வியந்தவர் பரவு வெண்காடுமேவிய
பயந்தரு மழுவுடைப் பரமரல்லரே 7

மலையுடனெடுத்த வல்லரக் கனீண்முடி
தலையுடனெரித் தருள் செய்த சங்கரர்
விலையுடை நீற்றர்வெண் காடுமேவிய
அலையுடைப்புனல் வைத்த அடிகளல்லரே. 8

ஏடவிழ் நறுமலரயனு மாலுமாய்த்
தேடவுந் தெரிந்தவர் தேரகிற்கிலார்
வேடமதுடைய வெண்காடு மேவிய
ஆடலையமர்ந்த வெம்மடி களல்லரே. 9

போதியர் பண்டியர் பொருத்த மில்லிகள்
நீதிகள் சொல்லியு நினையகிற்கிலார்
வேதியர் பரவு வெண் காடுமேவிய
ஆதியையடி தொழ வல்லலில்லையே. 10

நல்லவர் புகலியுண் ஞானசம்பந்தன்
செல்வனெஞ் சிவனுறை திருவெண் காட்டின்மேற்
சொல்லியவருந் தமிழ் பத்தும் வல்லவர்
அல்லலோட ருவினையறு தலாணையே. 11

வாழ்க்கை வரலாறு

தேவகோட்டையில் "செங்கக்கோவிலார் வீடு' என்பது எங்கள் வீட்டிற்குப் பட்டப் பெயர் — காரணம் ஒரு காலத்தில் செங்கக் கோவில் கிராமம் எங்களுடையதா யிருந்தது. எங்கள் பெரிய பாட்டனார் இராமன் செட்டியார் காலத்தில் அது எங்களை விட்டுப்போயிற்று. இருப்பினும் அந்தப்பெயரில் தான் எங்கள் வீடு இன்றும் வழங்கி வருகிறது எங்கள் பாட்டனார் அ.வயி. அடைக்கப்ப செட்டியார் எங்கள் தகப்பனாரைச் சிறுவயதிலேயே ஆறாவயலிலிருந்து பிள்ளை கூட்டிக்கொண்டார்கள்.. எங்கள் தகப்பனார் மிக அழகாக இருப்பார்கள். அவர்கள் முதல் மனைவி அலமேலு வுக்கு ஒரு ஆண் குழந்தை அவர் பெயர் முத்தையா. குழந்தை பிறந்த 7 நாளில் தாய் தவறி விட்டதால் பாட்டி முத்துக்கருப்பி ஆச்சி (எங்கள் தகப்பனாரின் சுவீகாரத் தாயார்) முத்தையாவை வளர்த்து வந்தார்கள். எங்கள் தகப்பனாருக்கு எங்கள் தாயார் இரண்டாம் தாரம். பெயர் உமையாள். கணவனிடம் மிகுந்த பதிபக்தி உள்ளவர்கள். காலையில் எழுந்ததும் கணவன் பாதங்களைத் தொட்டு வணங்கியபின் கருதாஊரணி போய்க் குளித்து அங்கு பிள்ளையார், அரசமரம், வில்வமரம், வன்னிமரம் முதலியவை களை சுற்றிவந்த பின் தான் வீட்டு வேலைகளைத் துவங்கு வார்கள். இதனால் எங்கள் தாயாருக்கு "அரசமரத்துப் புண்ணியவதி" என்ற பெயர் இன்றும் வழங்கி வருகிறது.

எனக்கு மீனுக்ஷி. அலமேலு, கமலாம்பாள் என்ற மூன்று சகோதரிகளும் தியாகராஜன் (9-11-1901) என்ற சகோதரரும் உண்டு. நான்கடைசி என்பெயர் வெங்கடாசலம் முத்தையா என்றும் சொல்வார்கள். காரணம் என் தாயார் வயிற்றில் நான் 40நாள் கெர்ப்பமாக இருந்தபோது வைத் தீஸ்வரன் கோவில் முத்துக்குமாரசாமி சந்நதியில் இது ஆண் பிள்ளையாகப் பிறந்தால் உன் பெயர் வைக்கிறேன்" என்று என் தாயார் சொல்லிக் கொண்டார்களாம். அதுபோல் நான் பிறந்தவுடன் "முத்தையா" என்றே பெயர் கூப்பிட்

டிருக்கிறார்கள். ஆனால் எனக்குக் கண்ணில் ஏதோ சிவப்புத் தோன்றியதாம்— அது என் தகப்பனார் முதல் மனைவி அலமேலுவின் குறை என்று சிலர் சொல்லக் கேட்டு பின் வெங்கடாசலம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். கையெழுத்து எல்லாம் இந்தப் பெயர்தான் முத்தையா என்றால்தான் பலருக்குத் தெரியும். நாங்கள் பண்புள்ள குடும்பம்- எங்களுக்குள் சில சமயம் மனவேறுபாடுகள் உண்டு. அதற்காக நாங்கள் பாசத்தையும் உறவையும்விட்டதில்லை. என் தமக்கை மீனாட்சி கணவர் பிச. வயி. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் அலமேலு கணவர் சத்திரம் சோம. என்று அழைக்கப்படும் அரு. அரு. சோம. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் கமலாம்பாள் கணவர் அரு. சேவு. சேவுகஞ் செட்டியார் அவர்கள் என் சகோதரர் AV.தியாகராஜாவின் முதல் மனைவி மீனாட்சி இரண்டாவது மனைவி சந்திரபிரபா என் மனைவி.முத்தாள்-எனக்கு சிறு வயதில் (1921) திருமணம் ஆகிவிட்டது. எங்களுக்கு செந்தில்நாதன் என்ற மகனும் மரகதவல்லி, சாரதாம்பாள். சகுந்தலா என்ற மூன்று பெண் மக்களும் உள்ளார்கள். செந்தில்நாதன் மனைவி முத்தாள் என்ற செல்வாம்பாள். மரகதவல்லி கணவர் சோம. முத்தையா, சாரதாம்பாள் கணவர் லெ. சிதம்பரம்-சகுந்தலா கணவர் வி. நாராயணன்

என்படிப்புமுதலில் சேஷய்யங்காருடைய திண்ணைப் பள்ளியில்; பின்பு சென்னை முத்தியால் பேட்டை உயர் நிலைப்பள்ளியில் ஏழாம்வகுப்பு; நாகை வெளிப்பாளையம் உயர்நிலைப்பள்ளியில் எட்டாம்வகுப்பு;திருநெல்வேலி இந்து கல்லூரி உயர்நிலைப்பள்ளியில் ஒன்பது, பத்து, படித்தேன் 11ஆம் வகுப்பு போவதற்கு முன் சூழ்நிலை சரியில்லாமல் படிப்பு நின்றுவிட்டது. காரணம் எனக்குக் கல்யாணமான சில மாதங்களுள் 1921ல் என் தகப்பனார் காலமாகிவிட்டார்கள். என் தமக்கை அலமேலு கணவர் சத்திரம் சோம. அவர்கள் கடைகளிலிருந்து கொண்டு சென்னை, நாகை,

திருநெல்வேலியில் படித்துக் கொண்டிருந்தேன். சத்திரம் சோம. அவர்கள் 1922ல் சிவபதவி அடைந்துவிட்டார்கள். அத்துடன் என் படிப்பும் நிற்க நேர்ந்தது. அதுசமயம் என் தமையனார் நெசவு சம்பந்தமாகப் படிக்க இலண்டனுக்குச் சென்றிருந்தார்கள். சத்திரம் சோம. அவர்கள் காலமான செய்தி கேட்டு என் தமையனார் இந்தியாவுக்கு 1922ல் திரும்பி வந்துவிட்டார்கள். இந்தக்காலம் தான் எனக்கு உலகம் புரிய ஆரம்பித்தது. காரணம் என் தந்தையும் சத்திரம் சோம அவர்களும் இருந்த காலம் நாங்கள் செல்ல மாக வளர்க்கப்பட்டவர்கள். அப்போது எனக்குக் கோபம் அதிகம் வரும். சோம. வாழ்ந்த காலத்தில் எங்களிடம் மிக அன்பாகவும் பணிவாகவும் நடந்து கொண்டவர்கள் எல்லாம் பிறகு மாறுதலடைந்திருப்பதைக் கண்டேன். உலகம் மாறி இருப்பதை உணர்ந்தேன். நம்முடைய போக்குக்கும் மற்ற வர்கள் வரவேண்டுமென்று நினைத்தது சரியில்லை. அவர்கள் போக்குக்கு நாம் போய்க் காரியம் முடிப்பதானால் ரப்பரைப் போல் இடத்துக்குத்தகுந்தபடி நம்மைப்பெருக்கிக் கொள்ளவோ சுருக்கிக்கொள்ளவோ நம்மை மாற்றிக்கொள்ள வோ வேண்டும் என்ற எண்ணம் எனக்கு அன்று உதித்தது- இதுதான் முதன் முதல் எனக்கு ஏற்பட்ட அனுபவம்-

என் தமையனுர் இலண்டனிலிருந்து இங்கு வந்த சமயம் நமது சமூக இளைஞர்கள் சமூக சீர்திருத்தத்திற்காக "தனவைசிய ஊழியர் சங்கம்" என்று ஒரு சங்கம் ஆரம்பித்து ஒவ்வொரு ஊருக்கும் போய்ப் பல சீர்திருத் தங்கள் பற்றிப் பிரசாரம் செய்து வந்தார்கள். அதில் முக்கிய மானவர்கள் சொ. முருகப்பா, ராய சொக்கலிங்கம், செ. ராம. வள்ளியப்பா பிச்சப்பா சுப்பிரமணியம், வயி. சு. சண்முகம் சு. சாந்தி மெய்யப்பா, ஆத்தங்குடி அண்ணுமலை செட்டியார் முதலானோர்கள் ஆவர் அந்தச்சங்கத்தில் என் தமையனுர் தியாகராஜா காரியதரிசி ஆனுர்கள்-அதனுல் மேல் கண்ட எல்லோரும் எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வருவார்கள்-

அப்போது செ. ராம. வள்ளியப்ப, செட்டியார் கானாடு காத்தான் சா. ராம.மு. ராம.வுக்குச் சொந்தமானதொழும்புக் கடைக்கு ஏஜண்டாகப் புறப்பட்டார்கள் அவர்கள் என்னை மேற்படி கடைக்குக் காஷியராகக் கூட்டிய பேசக் கானாடுகாத்தான் கூட்டிப்போய் மேற்படி சா. ராம. மு. ராம கடையை மேல் பார்த்த சா. ராம. மு. அண்ணாமலை செட்டியார் அவர்களிடம் (பிற்காலம் ராஜாசர்)மூன்று வருஷத்துக்கு சம்பளம் பூவிராகன் 550க்கு (ஒருவிராகன் ரூ. 3-50) சம்பளச்சிட்டுஎழுதி வாங்கிக்கொடுத்தார்கள் அதுபோல் நான் புறப்படத்தயாரானேன்-ஆனால் புறப்படமுடியவில்லை காரணம் என் தமக்கை அலமேலு கணவர் சத்திரம் சோம அவர்கள் காலமானதால் ஏற்பட்ட சில சிக்கல்கள் ஆகும் ஆகவே என் முதல் பயணம் தடைப்பட்டது.

பின்பு 1926 ஜனவரியில் எங்கள் தாய்மாமன் பிச. பழ. பழனியப்ப செட்டியார் அவர்கள் தம்பி பிச, சுப. சுப்பிரமணியன் செட்டியார் இருவருக்கும் சொந்தமான பர்மா தட்டோன் ஜில்லா வில்லியன் என்ற ஊரில் உள்ள கடைக்கு மூன்றுண்டுக்கு பூவிராகன் 550க்கு(ரூ1925) சம்பளம் பேசிப் புறப்பட்டேன். அதுசமயம் சின்னஅம்மான் சுப. வில்லியனில் இருந்தார்கள். அப்போது எனக்கு வயது 20 தேவகோட்டையில் என் பெரியஅண்ணன் முத்தையா செட்டியார் வழி அனுப்பினார்கள். புதுக்கோட்டை வரைபஸ்; பின்பு ரெயில். சென்னைக்கு காலை 7மணிக்குப் போய்ச் சேர்ந்தேன். உடனே குதிரை வண்டியில் பவழக்காரத் தெரு சென்றேன். ராம மெ. சித. கடையில் என் பெரிய தமக்கை மீனாட்சி ஆச்சி கணவர் சோமசுந்தரம் செட்டியார் இருந்தார்கள்-அங்கு குளித்துப் பலகாரம் சாப்பிட்டு காலை9-30க்கு ஒரு ரிக்ஷாவில் கப்பலடிக்கு போய் பர்மாவுக்கு ஒரு டிக்கெட் ரூ10 கொடுத்து வாங்கிக்கப்பலில் ஏறிக்கொண்டேன -அத்தான் சோம. வும் கப்பலடிக்கு வந்தார்கள -வெள்ளிக்கிழமை காலை 10-30க்கு அலியண்டா என்ற கப்பல் புறப்பட்டது (செலவுக்கு அம்மான்

பழ. ரூ 50 தந்தார்கள்) கப்பல் புறப்பட்டவுடன் எனக்கு வாந்தி எடுக்க ஆரம்பித்தது-அப்போது அந்தக் கப்பலில் இரண்டாம் வகுப்பில் பிரயாணம் செய்த தேவகோட்டை ரெட்டை அரு மைத்துனர் கைக்குளத்தார் வீடு காசி-செட்டியார் அவர்கள் தனது அறையில் காலியாய் இருந்த மேல் படுக்கையில் என்ஃன இருக்கச் செய்தார்கள் அந்த அறையில் உதவிசெய்ய வந்த கப்பல் பையனுக்கு ரூ 25 கொடுத்தோம் கப்பலில் நான் எதுவும் சாப்பிட முடியவில்லை கப்பலில் உணவுவிடுதி உண்டு. முடிந்தவர்கள் வாங்கிச் சாப்பிடலாம் திங்கட்கிழமை காலை பர்மாவில் ஐராவதி ஆற்றில் ரெங்கோன் துறைமுகத்தில் கப்பல் நங்கூரம் இட்டது ஏற்கனவே தகவல் கொடுத்திருந்ததால் எங்கள் அம்மான் பங்காளி சின்னவள்ளியப்ப செட்டியார் கப்பலடிக்கு வந்து என்னைக் கூட்டிப் போனார்கள். அவர்கள் காரைக்குடி மெ. செ. ச. கடையில் மேலாளராக இருந்தார்கள்-குளித்துக் கொஞ்சம் சாப்பிட்டபின் எனக்குக் கப்பல் மயக்கம் தீர்ந்தது புதன்கிழமை புறப்பட்டு வருவதாக வில்லியனுக்கு அன்று தினம் கடிதம் எழுதினேன். அதுபோல் புதன்கிழமை காலை 7 மணிக்கு ரெங்கோனிலிருந்து ரயிலில் புறப்பட்டு நீம்பளே என்ற ஸ்டேஷனுக்கு பகல் 2மணிக்குப் போய்ச் சேர்ந்தேன்

நிம்பளேயிலிருந்து வில்லியன் மூன்று மைல்—குதிரை வண்டியில் போக வேண்டும். அம்மான் சுப. நீம்பளே வந்து என்னை கூட்டிப் போனார்கள் - மாலை 4 மணிக்கு வில்லியன் போய் காப்பிபலகாரம் சாப்பிட்டபின் அம்மான் சுப. தனியே வெளியே கூட்டிப் போனார்கள் - ஊர் விஷயங்களை விசாரித்த பின் "மாப்பிளே நீங்கள் யார் கடைக்கு வந்திருக்கிறீர்கள்" என்று கேட்டார்கள் எனக்குப் பெரிய அதிர்ச்சியாய் இருந்தது. உடனே நான் "பெரிய அம்மான்

உங்களுக்கு நான் வருவது பற்றி எழுதவில்லையா என்று கேட்டேன் உங்களை அனுப்புவதாக எழுதியிருந்தார்கள். நான் அதற்குநீங்கள் இங்கிலீஷ படித்திருப்பதால் ரெங்கோன் டவுனுக்குத்தான்பொருந்தும் வில்லியன் போன்ற நாட்டுக்குப் பொருந்தாது.என்று எழுதினேன்அதற்கு அப்புறமும் உங்களை அனுப்பியிருக்கிறார்கள்'' என்றார்கள். எனக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை சற்று யோசித்து விட்டு ''நம்மள் கடைக்குத்தான் வந்திருக்கிறேன்'' என்றேன்-இரவெல்லாம் எனக்கு நிம்மதி இல்லை நம்மை ஏதாவது காரணம் சொல்லி ஊருக்கு அனுப்பிவிடுவார்களோ ' என்ற எண்ணம் -அன்றிலிருந்து அவர்கள் எதுசொன்னாலும் அதற்கு கீழ்படிந்து நடந்துவந்தேன்.

வில்லியனில் நாங்கள் இருந்த வீடு கெட்டிக் கட்டிடம்- நாங்கள் கீழே இருந்தோம். மேல் மாடியில் அவ்வூர் மாஜிஸ்ட்ரேட் எதிரில் ஆறு-ஊரைச் சுற்றி மூன்று பக்கம் மலை- இயற்கை அழகு உள்ள ஊர். என்னுடன் ரெங்கசாமி முத்துக்கருப்பன் என்ற இரண்டு கணக்குப் பிள்ளைகள் சட்டையன் என்ற தண்டல்காரன் சின்ன ஊராக இருந்ததால் பாதுகாப்புக்காகப் பெரிய நகைகளை சைக்கோவில் ஒரு கடையில் இருப்புப் பெட்டகம் வைத்து அதில் வைத்து வந்தோம். நகை வில்லியனிலேயே இருந்தால்கூடத் திருப்ப வரும் ஆசாமியிடம் பணம் வாங்கிய மறுநாள் தான் கொடுப்பது வழக்கம். அவர்களுக்கு நகை சைக்கோவில் இருப்பதாகச் சொல்லுவோம் அதனால் ஜனங்கள் இது சின்னக்கடை என்று முக்கியமாகக் கருதமாட்டார்கள். இங்கு முன்சீப் கோர்ட்டு உண்டு அந்தப் பக்கத்து ஆசாமிகள் பேரில் பிராது போடுவதானால் வெளியூர்க் கடைக்காரர்கள்

வில்லியனுக்குத்தான் வரவேண்டும். வில்லியனில் எங்கள் கடையில் தான் சாப்பிடுவார்கள். எப்போதும் கடையில் சாதமும் ஊறுகாயும் இருக்கும். சமையல்காரன் உண்டு அங்கு போனபின்பு ஆசாமிக்காரன்கள் வீட்டுக்குக் கணக்குப் பிள்ளைகளுடன் கிராமங்களுக்குப் போய் வருவேன். ஒருநாள் அவ்வாறு காலை 6 மணிக்குப் புறப்பட்டு மாலை 5மணிக்கு திரும்பிவரும் போது 21மைல் நடந்ததாக கணக்குப் பார்த்தோம் இவ்வாறு சுமார்6 மாதம் ஆன பின் அம்மான் சுப. "மாப்பிள்ளை நீங்கள் கடையை பார்த்துக் கொள்ளுங்கள். நான் ஊர் போய் வருகிறேன்." என்றார்கள். அவர்களுக்கு என்பேரில் நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. நானும் ஒப்புக் கொண்டேன். சின்ன அம்மான் சுப இந்தியாவுக்குப் புறப்பட்டுப் போய்ச் சேர்ந்தார்கள். அவர்களும் அவர்கள் அண்ணனும் வில்லியன் வந்து கடையைப் பிரித்து என்னையே இருவருக்கும் புதுக் கணக்கு எழுதச் சொன்னார்கள் அவ்விதம் செய்த பின்பு 1928 ஜுலையில் அங்கிருந்துபுறப்பட்டு இந்தியா வந்து சேர்ந்தேன்.

நான் பிறந்தது 20-10-1906 எனது கல்யாணம் 21-5-1921 தகப்பனார் காலமானது 6-8-1921 என் தமையனார் தியாகராஜா இலண்டனிலிருந்து வந்த பின்பு தன வைசிய ஊழியர் சங்கக் காரிய தரிசியாக இருந்த சமயம் 1928ல் நமது சமூகத்திலேயே முதன் முறையாக முதல் மனைவியுடனும் இரண்டு குழந்தைகளுடனும் கடல் கடந்து கப்பலேறி ரெங்கோன் வந்தார்கள். இதற்கு முன் நமது பெண்கள் கப்பலேறும் வழக்கம் இல்லை. அதனால் அவர்களுக்கு ரெங்கோனில் எதிர்ப்பு இருந்தது. இருந்தாலும் இளைஞர்கள் ஆதரவு இருந்தது. அங்கு நமது சங்கத்தில்

உரைஆற்றி விட்டு இந்தியா திரும்பினார்கள். இந்த விபரங்கள் அப்போது ராய. சொ. நடத்தி வந்த 'ஊழியன்'' பத்திரிகையில் வெளி வந்திருக்கின்றன. ராய.சொ. தலையங்கம் எழுதியிருக்கிறார்கள். அந்த ''ஊழியன் பத்திரிக்கை அழகப்பா பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பிரிவில் இன்றும் இருக்கிறது. அதன் புகைப்படப் பிரதி சென்னையில் என் தமையனார் வீட்டில் இருக்கிறது.

1928ல் நான் இந்தியா வந்த பின் கானாடுகாத்தான் சா. ராம. அரு. ராம. ராமனாதன் செட்டியாருடைய ரெங்கோன் கடைக்குஅடுத்தாளாக 1150 பூவிராகன் சம்பளத்துக்கு 1929 நவம்பரில் புறப்பட்டுச் சென்றேன். எனக்கு அவர்களிடம் சம்பளம் பேசிவிட்டது. ஆறாவயல் மா. வெ. வெங்கடாசலம் செட்டியார் அவர்கள் எனக்கு மேலாளராகப் புதுப்பட்டி சொக்கலிங்கம் செட்டியார் இருந்தார்கள் என்னிடம் மிக அன்பு உள்ளவர்கள் மேற்படி மா. வெ வெங்கடாசலம்செட்டியார் என்னை சா.ராம.அரு ராம.வுக்கு சம்பளம்பேசிவிட்டாலும் ச.ராம.மு.அவுக்கு ரொம்ப வேண்டியவர்கள் மேற்படி ராமனாதன் செட்டியார் மைனராக இருந்தபோது மு.அ. அவர்கள் மேல் பார்த்த விஷயமாக மேற்படி ராமனாதன் செட்டியார் கேஸ் போடுவதற்கு சில ஆதாரங்கள் பாங்குகளில் தேடச் சொல்லியிருந்தார்கள் அதை நான் கவனித்துக் கொண்டிருந்தேன். அது சமயம் மேற்படி மா.வெ.வெ. அவர்கள் பவுண்டை என்ற ஊரில் கொத்தமங்கலம் முதலாளி ஒருவருடைய கடையில் மேலாளராக இருந்தார்கள். அவர்கள் ரெங்கோன் வந்தால் மு.அ. கடையில்தான் இறங்குவார்கள். அவ்விதம் வந்தபோது ஒருநாள்என்னிடம் மேற்படி மா வெ.வெ. எங்கள்ஏஜெண்டு சொ. என்னைப் பற்றி திருப்திக்குறைவாக இருப்பதுபோல் கேள்விப்படுவதாகவும் அவ்விதமானால் அங்கேயே சா.ராம.அரு.ராம. கடையிலிருந்து விலகி மு.அ.கடையில்

கூடுதல் சம்பளத்துக்கு சேர்த்து விடுவதாகச் சொன்னார்கள் ஏதாவது காரணத்தால் சா.ராம.அரு.ராம. வை விட்டு விலக நேர்ந்தால் இந்தியா போய் மறுபடி புதிதாக சம்பளம் பேசி வருவதுதான்கவுரவமாக இருக்கும் என்று சொல்லிவிட்டேன்

மற்றொரு நாள் மேற்படி வெ. அவர்கள் பாங்குகளில் போய் நான் என்ன தேடி வருகிறேன் என்பதைக் கேட்டார்கள். இதெல்லாம் மேற்படி மு. அ ஏஜெண்டுகளின் பேரில் கேட்கிறார்கள் என்பது எனக்குத்தெரியும். நான்சொன்னேன் "அத்தான்! நீங்கள் எனக்கு ரொம்ப வேண்டியவர்கள் உங்களிடம் எதையும் சொல்ல மறுப்பது சரியல்ல. நான் உண்மை சொல்லுகிறேன். ஆனால் நீங்கள் மு. அ. வீட்டில் வந்து தங்குகிறீர்கள். நீங்கள் நான் சொல்வதை வேண்டுமென்று சொல்லமாட்டீர்கள். எதையாவது பேச்சு வாக்கில் சொல்லிவிட்டால் எங்கள் முதலாளிக்கு பாதகமாகுமே" என்று சொன்னேன். இதைக் கேட்டவுடன் மா. வெ. வெ. சிரித்துக்கொண்டு "முத்தையா நீ கெட்டிக்காரன். என்னிடம் எதுவும் சொல்லவேண்டாம்" என்று சொல்லி விட்டார்கள். இதெல்லாம் என் சமத்தால் நடந்ததாக நான் சொல்லவரவில்லை. "நேர்மையாக நடக்கும்படி எனக்கு ஆண்டவன் அளித்த அறிவே காரணம். மு. அ. அவர்கள் பேரில் தேவகோட்டை கோர்ட்டில் 1930ல் ஒரு வழக்கை சா. ராம. அரு. ராமனாதன் செட்டியார் போட்டார்கள். அது தங்கள் எஸ்டேட்டை தான் மைனராக இருந்தபோது மேல்ப் பார்த்ததற்கு கணக்கு காட்டும்படி போட்டகேஸ். இந்த கேஸ் பிற்பாடு 1937ல் ராஜி செய்யப்பட்டு ரூ. முப்பது இலட்சம் சா. ராம. அரு. ராம. வுக்கு மு. அ. அவர்கள் கொடுத்தார்கள்.

நான் ரெங்கோன் கடைக்கு மறுபடி மேலாளராகப் போய் பழைய மேலாள் சொ. அவர்களிடம் பொறுப்பை வாங்குவதென்றும் சம்பளம் பூவிராகன் 1751 என்றும் பேசி முடிவாகியிருந்தது. இதற்கு மத்தியில் செய்கோனைச்

சேர்ந்த கந்தோ கடைக்கு ஏற்கனவே காரைக்குடி கருப்பட்டி லெட்சுமணன் செட்டியார் ஏஜண்டாயிருந்தார்கள். 'அவர்களிடம் செய்கோன் போய் பொறுப்பு வாங்குவதற்காக லெட்சுமிபுரம் சொ. மு. பெ. அருணாசலம் செட்டியாரைப் பேசி வைத்திருந்தார்கள் மேற்படி அரு. சென்னை வரை புறப்பட்டுப் போய் ஏதோ காரணத்தால் செய்கோன் போக முடியாது. ரெங்கோனுக்கு வேண்டுமானால் போகிறேன் என்று சொன்னதால் அவர்களை ரெங்கோனுக்கு அனுப்பிவிட்டு என்னை கந்தோவுக்கு அதே சம்பளத்துக்குப் புறப்படச் சொன்னார்கள் எனக்குப் போகத் தயக்கமாயிருந்தது. காரணம் கந்தோ ஏஜண்டு அந்நாட்டில் ரொம்ப அனுபவம் உள்ளவர்கள். சமீப காலமாக அவருக்கும் முதலாளிக்கும் மனவேற்றுமை ஏற்பட்டிருந்தது. நான் போய் அவர் என்னிடம் கணக்கு ஒப்புவிக்க மறுத்தால் முதலாளி வழக்கு நடவடிக்கை எடுக்கச்சொல்லக் கூடும். அந்நாட்டு அன்னாய பாஷையும் பிரெஞ்சு பாஷையும் தெரியாது. கோர்ட்டு நடவடிக்கை எடுத்துத் தோற்று விட்டால் தற்போது உள்ள சளிவு முதலாளிக்கு மாறிவிடும் இந்த விபரங்களையும் சொன்னதோடு கணக்கு வாங்க முடியாமல் போனால் முதலாளிக்கும் மதிப்பு பாதிக்கப்படும் என்று சொன்னேன். அதற்கு முதலாளி "உங்கள் திறமை எங்களுக்கு தெரியும் நீங்கள் போய்க் கணக்கு வாங்க முடிந்தால் வாங்குங்கள் முடியாவிட்டால் லெட்சுமணன் செட்டியாருடன் கூட இருங்கள். நாங்கள் வழக்குப் போடும்படி எழுதவில்லை" என்று சொல்லிவிட்டார்கள். சில சால்ஜாப்புகள் சொல்லிப் பார்த்தேன். எல்லாவற்றிற்கும் சமாதானம் சொல்லிவிட்டார்கள்.

பிறகு என் மகன் செந்தில்நாதனுக்குப் புதுமை செய்து விட்டு 1933 மே மாதம் சென்னையிலிருந்து புறப்பட்ட "அசேலரிதோ" என்ற பிரெஞ்சு கப்பலில் சென்னையிலிருந்து செய்கோனுக்கு புறப்பட்டேன். எனக்கு அடுத்

நானாக காரைக்குடி நாராயணன் செட்டியாரை என்னுடன் அனுப்பினார்கள். அவர் என்னை விட மூப்பு. அதனால் அவர் கொஞ்சங்கூட என்னை மதிக்காமலே நடந்து கொண்டிருந்தார். சென்னையிலிருந்து புறப்பட்ட 8ம் நாள் செய்கோன் போய்ச் சேர்ந்தோம். வழக்கம்போல் எனக்கு கப்பலில் வாந்தி ஏற்பட்டது. ஒன்றும் சாப்பிட முடியவில்லை செய்கோனில் ஏஜண்டு லெட்சுமணன் செட்டியார் வந்து எங்களைக் கூட்டிக் கொண்டார்கள். நாங்கள் போன அன்று பாரிசிலிருந்து இரவு 8 மணிக்கு நகரத்தார் சங்கத் தலைவரை பேசச்சொல்லி சர். ஏ. இராமசாமி முதலியாரிடமிருந்து தொலைபேசித் தகவல் வந்திருந்தது. அந்த விஷயம் என்னவென்றால் செய்கோனில் நிலச்சுவான்தாரர்களுக்கு 4% வட்டிக்கு கடன் கொடுப்பதற்காக "நீண்டகாலக்கடன் சங்கம்" (credit a long term) என்ற ஒரு சொசைட்டி ஏற்படுத்தி இருந்தார்கள். நம்மிடம் 12% வட்டிக்கு கடன் வாங்கிய நிலச்சுவான்கள் அந்த சொசைட்டியில் கடன் கேட்டிருந்தார்கள். அந்த சொசைட்டி தலைவர் நம்மைக் கூப்பிட்டு அவர்கள் கொடுக்கும் தொகையை முதல் ஈட்டுக்காரருக்கு 78% பின் ஈட்டுக்காரருக்கும் மற்றவர்களுக்கும் 22% வாங்கிக்கொள்ளுப்படி வற்புறுத்தினார்கள். அதற்கு ஒத்துக் கொள்ளாதவர்களை நாடு கடத்தினார்கள் இது விஷயமாக லண்டனிலிருந்த A. ராமசாமி முதலியாருக்கு தகவல் கொடுத்திருந்தார்கள். அவர் பாரிஸ் வந்து மந்திரிகளைப் பார்க்க வந்திருப்பதாகவும் அங்கு விருந்து வைக்க 200பவுன் அனுப்பும்படியும் அன்று டெலிபோனில் சொன்னார். நாங்கள் போன மறுநாள் இம்மிகிரேஷன் டிப்பார்ட்மெண்டு எங்களிடம் கைரேகை (புதிதாய் போனவர்களுக்கு வாங்கிக் கொண்டார்கள். ஏற்கனவே போனவர்களாக இருந்தால் ஏற்கனவே உள்ள ரேகையை சரிபார்த்துக் கொள்வார்கள்.

செய்கோன் மிக அழகானஊர். Bouleward பூல்வார்டு என்று சொல்லப்படும் வீதிகள் மிக அகலமானவை.

நம் நகரத்தார் கடைகள் (Rue Oheir) ரூ ஓர் George quyrmer) என்ற ஜார்ஜ் குயுமெர் வீதிகளில் இருந்தன (Rue Oheir) ரூ ஓரில் சுப்பிரமணிய சுவாமிகோயில். வீதிகள் பூராவும் மரங்கள் வைத்து நல்ல சோலையாக இருக்கும் நாங்கள் போய் 2 தினத்தில் லெ. வும் நானும் என் அடுத்தாள் நா. வும் கந்தோவுக்கு பஸ்ஸில்புறப்பட்டோம். செய்கோனில் 170 கி. மீ. இரண்டு பெரிய ஆறுகளை கடக்கவேண்டும். பஸ்களையும் பிரயாணிகளையும் படகுகளில் ஏற்றி அக் கரையில் விடுவார்கள். காலையில் புறப்பட்டு மதியம் போய்ச் சேர்ந்தோம்.

கந்தோவும் நல்ல அழகான ஊர். பெரிய ஆற்றங் கரையில் உள்ளது. பொதுவாக செய்கோனில் ஆற்றங் கரைகளிலும் ஓடைக்கரைகளிலும் தான் கிராமங்கள் இருக்கும். மிக செழிப்பான தேசம். நெல் தான் முக்கிய வெள்ளாமை. நம்மவர்கள் கடன் கொடுத்ததெல்லாம் நிலச் சுவான்தார்களுக்குத்தான். கந்தோவிலும் நம்மவர் கடை சுமார் 6 இருந்தன. எங்கள் சா. ராம. அரு. ராம. கடைக்கு சுமார் 12 லெக்ஷம் வெள்ளி (பியாஸ்டர்) இருந்தது. பணம் நருக்கடியான காலம். நெல்விலை ஒரு கூடை 22 சென்டாக இருந்தது. நெல் விலை இறக்கத்தால் ஆசாமிகள் கடன்களை திருப்பித்தர முடியவில்லை (இந்த ஒருகூடை நெல் பின்னால் 1937ல் (2வெள்ளி) 200 சென்டாக வந்தது) கடன் வசூலா காததால் (100) வெள்ளி நோட்டைக் கூடபார்க்க முடியாது கந்தோவைப் போல நம்மவர்களுக்கு சொக்திரான், பக்ளியூ ஜியா, லொங்கீன் போன்ற சில ஊர்களில் கடைகள் இருந்தன. எங்கள் லெ. வுக்கு லொங்கீனில் கடை உண்டு. கந்தோவில் லெ. வுக்கு அடுத்தாளாக ஆத்தங்குடி அருணாசலம் செட்டியார் இருந்தார். அவர் எனக்கு ஒத்த வயதாக இருந்ததால் என்னுடன் சரளமாகப் பழகினார் நான் போய் கொஞ்ச நாள் சென்று லெ. பேரில் ஏற்கனவே சிலர் எழுதியிருந்த அநாமதேயக் கடிதங்களில் கண்ட புகார் களை விசாரிக்கும்படி ஊரிலிருந்து முதலாளி எழுதியிருந்

தார்கள். எனக்குபாஷை தெரியாது.என்னுடையஅடுத்தாள் நா. சாரமில்லை பழைய அடுத்தாள் அரு. உள்ளது. சொல்ல மாட்டார். இதற்காக வேறு சிலரை சிநேகம் கொண்டு விசாரித்தால் இதே புகார்களை வாய் மொழியாக சொல்லு கிறார்களே தவிர ருசு செய்யக்கூடிய ஆதாரங்கள் கிடைக்க உதவி செய்ய மறுக்கிறார்கள். காரணம் லெ. வுக்கு பயம் லெ. செல்வாக்கு உள்ளவர், செய்கோனிலேயே விரல் விட்டு எண்ணக் கூடியவர்களில் இவர் ஒருவர். நான் உடனே தேவகோட்டைக்கு (அப்போது கேஸ் நடத்துவதற்காக ஆபீஸ் அங்குதான் இருந்தது) மேற்படி புகார்களுக்கு ருஜூ கிடைக்காததால் நான் ஒன்றும் எழுதுவதற்கு இல்லை என்று எழுதிவிட்டேன் மற்றும் சில தினங்கள் சென்று லெ வை ஊருக்கு அனுப்பும்படி கடிதம் வந்தது. லெ. விடம் சொன்னேன். அப்போது உள்ள வழக்கம் புது ஏஜண்டு இனங்களைப் பார்த்து வசூலாகும் இனங்களை மதித்து எழுதிக் கொண்டு பழைய ஏஜண்டுக்கு இவ்வளவு லாபம் என்று லெட்டர் கொடுப்பது வழக்கம். அதுபோல் செய்தால் தானே நலம் என்றுசொன்னார். "இப்போதுஇனங்களிலிருந்து பணம் வசூலாகாத நிலமையில் எப்படி இனங்களை மதித்து எழுதமுடியும். ஆனதால் இருக்கிறபடி கணக்கை ஒப்புவித்து விட்டுப் போங்கள். பின்னால் வசூலாகும்போது அதற்குள்ள லாபத்தை உங்கள் கணக்காகவே வைத்துக்கொண்டு போனஸ் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று சொன்னேன். இது புது மாதிரியாக இருந்ததால் அவருக்கு தெளியவில்லை. உடனே செய்கோன் போய் அவா நண்பர்களைக் கலந்திருக் கிறார். அவர்கள் நான் சொன்னதை ஆமோதித்திருக்கிறார் கள். உடனே வந்து சரி என்று சொல்லி 1933 ஜுன் 30 தேதியோடு கணக்கை முடித்து குறிப்பில் நானும் அவரும் கையெழுத்துப் போட்டோம். ஊருக்குப் புறப்படுவதற்கு செலவுக்கு ரூ 2000/- தரவேணுமென்று சொன்னார். கடை யில் செலவுக்கே நெருக்கடி இவ்வளவு தொகைக்கு எங்கே போவது. நான் செய்கோன் போய் பி.கு. நா. ஏஜண்டு

அமராவதிபுதூர் அண்ணாமலைசெட்டியாரிடம் கைமாத்தாக ரூ 2000 கேட்டேன். லெ புறப்படும் சமயம் தருவதாகவும் சொன்னார். அந்த தைரியத்தில் லெ. வை புறப்பட ஏற்பாடு செய்யுங்கள் என்று சொல்லி விட்டேன்: இந்த நிலையில் ஒருநாள் மாலை ஒரு ஆசாமியும் அவனுடன் இன்னொருவனும் வந்து லெ விடம் பேசினார்கள். லெ கோபமாக பேசி அவன்களை போகச் சொல்லிவிட்டார். இதை நானும் இரண்டு அடுத்தாள்களும் கேட்டுக் கொண்டிருந்தோம் எனக்கு ஒன்றும் புரியவில்லை அவர்கள் போன பின்பு லெ சுருட்டைபற்ற வைத்துக் கொண்டு பின்பக்கம் போய் விட்டார். அவர் போனபின்பு அடுத்நாள் அரு. வை விபரம் கேட்டேன். அவர் சொன்னார் வந்த ஆசாமிபேரில் கோர்ட்டில் 4200க்கு டிக்கிரியாகியிருக்கிறது. அவன் பணம் கொண்டுவந்திருக்கிருன். கூடவந்தவன் வக்கீல் குமாஸ்தா அவன் இப்போது ரூ 4000 தருவதாகவும் ரூ 200 உறுதிப் பத்திரம் தருவதாகவும் 2 மாதத்தில் அதற்கு பணம் தந்து விடுவதாகவும் சொன்னான் அதற்கு லெ. ஒத்துக்கொள்ளவில்லை. என்றார். உடனே அருவைக் கூட்டிக்கொண்டு அந்த வக்கீல் வீட்டுக்குப் போய் அவன்கள் சொன்னபடி ரூ. 4000/-வாங்கிக்கொண்டு ரூ. 200/-க்கு உறுதிப்பத்திரம் வாங்கிக்கொண்டு எங்கள் வக்கீல் "லிமே" வீட்டிற்குப்போய் டிக்கிரியை கான்சல் செய்துவிட்டு வந்தோம். 4 மணிக்கு போன நாங்கள் 6 மணிக்குத்தான் வந்தோம். பின் பக்கம் போன லெ. வந்தபோது நெடுநேரமாகியும் நாங்கள் வராததைக் கண்டுஎன் அடுத்தாள் நா. வை கேட்டிருக்கிறார். அவர் தனக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்லிவிட்டார் நாங்கள் வந்தவுடன எங்கு போனீர்கள். காப்பி சாப்பிடவில்லையே என்றார். நாங்கள் விஷயத்தைச்சொன்னவுடன் டிக்கிரி தொகையை குறைத்து வாங்கினால் நாளை முதலாளி கேள்விக்கு இடமாகும் என்றார். அதற்கு முதலாளிக்கு நான் எழுதிக் கொள்கிறேன் என்றேன். என்னைப் பற்றி சிறுபையன் என்று அவர் போட்டிருந்த எடையை அன்று

மாற்றிக் கொண்டார். பின்பு விசாரித்தபோது இதே ஆசாமி அவர் லொங்சீன் கடைக்கு பணம் கொடுக்கவேண்டியிருந்த தால் அவனைவிரட்டி விட்டு லொங்சீனுக்கு தகவல் கொடுத்து வசூல் செய்ய நினைத்தார் என்று தெரிந்தது.

லெ. வும். ஜுலை மாதம் இந்தியாவுக்குப் புறப்பட்டார். ஆனால் அவருடைய அடுத்தாள் அருணாசலம்செட்டியாரை சில மாதங்கள் சென்று போகலாம் என்று நிறுத்திக் கொண்டேன். லெ. செலவுக்கு அவர் கேட்டபடி ரூ2000/- கொடுத்து அனுப்பினேன். அவர் போனபின்பு நடந்த நிகழ்ச்சி ஒன்று. ஓம்புநாங் என்ற ஆசாமியிடம் எங்களுக்கு ரூ நாலு லெக்ஷம் பாக்கி அவன் முன் கூறிய கிரெதி ஆங்லோங்தெர்ம் என்ற சொசைட்டியில் கடன் கேட்டிருந் தான். அவன் பேரில் எங்களுக்கு முதல் அட்டாச்மெண்ட் மேற்படி சொசைட்டி ஆபீசர் என்னை வரும்படி நோட்டீஸ் அனுப்பினார். நான் இந்த விஷயத்தை முதலாளிக்கு எழுதி அவர்கள் தரும் 78% வாங்கலாமா என்று கேட்டிருந்தேன். அதற்கு பதில் வராததால் மேற்படி சொசைட்டிக்கு போக வில்லை. அவர் பல நோட்டீஸ்கள் அனுப்பியும் நான் போகாத ததால் மேற்படி ஆபீஸர் (அவர் பெயர் வலேத். பிரெஞ்சுக் காரர்) நமது நகரத்தார் சங்கத்தைக் கூப்பிட்டு நான் வரா விட்டால் என்னை நாடு கடத்துவதற்குகவர்னர்ஜெனரலுக்கு எழுதப்போவதாக டெலிபோன் செய்திருக்கிறார் நமது சங்கத்திலிருந்து எனக்கு கந்தோவுக்கு டெலிபோன்செய்து நான் முதலாளியிடமிருந்து தகவல் வரவில்லை என்று சொன்னதை மேற்படி ஆபீசரிடம் நேரில் வந்துசொல்லும்படி சொன்னார்கள். அதுபோல் நான் செய்கோன் வந்துசங்கத்து குமாஸ்தா சத்தியராஜ் என்பவரை கூட்டிக்கொண்டுமேற்படி ஆபீசுக்கு போனேன் அங்கு போனவுடன் அந்த ஆபீசர் பார். நீ இன்று வராவிட்டால்உன்னை நாடுகடத்த கெவர்னர் ஜெனரலுக்கு சிபார்சு செய்ய இருக்கிறேன்''. என்று அவர் டைரியை காட்டினார். பிரெஞ்சு பாஷையில் சொன்னார். அப்போது என்னுடன் வந்தசத்தியராஜ் எனக்கு

இங்கிலீஷ் தெரியும் என்பதை ஆபீசரிடம் சொன்னார். உடனே அவர் இங்கிலீஷில் பேச ஆரம்பித்தார். நான் அவரிடம், "முதலாளியிடமிருந்து தகவல் இல்லை. அவர்கள் சம்மதம் இல்லாமல் குறைத்து (78%) வாங்கினால் பாக்கி தொகைக்கு என்னைத் துயருவார்கள். ஆனதால் என்னை நாகடத்தினுல் நான் இந்தியா போகத்தயார். காரணம் எனக்கு அந்த நாட்டில் சொத்தோ, பணமோ எதுவும்கிடையாது என்றேன். இதைக் கேட்டவுடன் ஆபிசர்பேச்சு தளர்ந்தது. "பணம்கிடைக்காத காலத்தில் நாங்கள் பணம் தருகிறோம். இங்கு உள்ள நிலைமையை உன் முதலாளிக்கு எழுது" என்ருர் நானும் பார்த்தேன். இவ்வளவு பெருந்தொகையை ஆசாமி பேரில் பிராது செய்து வாங்குவது கடினம் என்று நினைத்து ஆபிசரிடம் ஒரு சமரச ஏற்பாடு சொன்னேன். "நீங்கள் தரும் 78% நான் வாங்கிக்கொள்கிறேன். பாக்கி 22% ஆசாமியைத்தரச் சொல்லுங்கள்" என்றேன். அவனைக் கேட்டுச் சொல்கிறேன் நாளைவா" என்ருர் மறுநாள் போனபோது ஆசாமியும் வந்திருந்தான் ஆபிசர், "பூரா நிலத்தையும் எங்களுக்குஈடுபோட்டு தந்த பின்பு உனக்கு தருவதற்கு ஒன்றுமில்லையே என்று ஆசாமி சொல்லுகிருன் என்ருர். அவனுக்கு பெரியவீடு இருக்கிறது என்றேன். "அந்த வீடு கிராமத்தில் உள்ளதை என்ன செய்ய முடியும் "என்று ஆசாமி கேட்டான். "வீட்டை இடித்து மேன்கோப்பை செய்கோன் கொண்டு வந்து விட்டால் எனக்குப் பணமாகி விடும் என்றேன். நான் உள்பட எல்லாரும் சிரித்தோம். அதுபோல் சொசைட்டியிடம் 78% 22%க்கு மேற்படி வீட்டை அடமானம் போட்டும் வாங்கித் தந்தார். மற்றும் சில ஆசாமிகளிடம் நோக்கம் போல் சொசைட்டியில் வாங்கிக்கொண்டோம்.

மறுபடி செய்கோனில் நடந்த நிகழ்ச்சி பழய கணக்கு லெ.ஊர் சென்ற சில மாதங்கள் மேற்படி அடுத்தாள்

அருணாசலம் செட்டியாரும் இந்தியாபோய்விட்டார் அதனால் எனது அடுத்தாள் நாராயணன் செட்டியாரும் நானும் தான். இருந்தோம். ஆசாமிகளிடம் பணம் வருகிறதோ இல்லை யோ நாங்கள் அவர்களிடம் போய்க் கடனை கேட்டுக் கொண்டு வந்தோம். எனக்கு செய்கோனின் அன்னாம் பாஷை தெரியாததால் அடுத்தாள் நாராயணன் செட்டியார் ஆசாமிகளிடம் பேசி அவர்கள் சொல்வதை எனக்கு மொழி பெயர்த்து சொல்வார். அதனால் அவர் என்னை மதிக்காம லேயே நடந்து கொண்டு வந்தார். நானும் பொறுமையோடு சகித்துக் கொண்டு வந்தேன். ஒரு நாள் செய்கோன் போய் வந்த வரவு செலவு கணக்கு சிட்டைகளையும் மீதி இருப்பு பணத்தையும் கொடுத்துக் கணக்கு எழுதச் சொன்னேன். இரண்டு நாளாயிற்று. கணக்கு எழுதிய பாடில்லை. கேட்டதற்கு "இது என்ன கணக்கு புரியாத கணக்கு இருப்பு சரியாக வரமாட்டேன் என்கிறது" என்று சற்று கேலியாய் சொன்னார். உடனே நான் சிட்டைகளை வாங்கிக் கொண்டு அவைகளின் படி நான் சொல்ல அவர் கணக்கு எழுத இருப்பு சரியாக வந்து விட்டது. அதிலிருந்து அவரும் சற்று அடக்கமாய்ப் பேசலானார். இருந்தாலும் அவர் போக்கு எனக்கு ஒத்துவரவில்லை இந்த விபரத்தை முதலாளிக்கு எழுதினேன். அவர்கள் ஏற்கனவே கடையில் இருந்த மாத்தூர் பெத்தபெருமாள் என்ற கணக்குப்பிள்ளை யை அனுப்பினார்கள் அவரும் வயதில் எனக்குமூப்புத்தால் அன்னாம் பாஷை மிகத்தெளிவாகப் பேசுவார். அவர் வந்து விட்டதால் நாராயணன் செட்டியாரை விலக்கி விட்டோம்.

பின்பு 1935ல் எனக்கு பதிலுக்கு, ஏற்கனவே ரெங்கோன் போயிருக்கிற லெட்சுமிபுறம் சொ. மு. பெ. அரு. அருணசலம் செட்டியார் மகன் முத்தையாவை அனுப்பினார் கள். அங்கிருந்து புறப்படும்போது பலர் எனக்கு விருந்து வைத்தார்கள். அப்போது வேணுவா என்ற ஊரில் விரையாச் சிலையைச்சேர்ந்த சொக்கலிங்கம் செட்டியார் எனக்குஅளித்த

விருந்தில் ஒரு பாமாலை அளித்தார்கள். அதுவும் இப்போது என்னிடம் இருக்கிறது. அதன் தேதி யுவஞ ஆனிமீ 24ஆம் தேதி நான் மலேயா மார்க்கமாக இந்தியா வந்தேன் அப்போது எனது மைத்துனர் சொக்கலிங்கம் பினாங்கில் நா. அரு. கடையில் இருந்தார்கள். பெரிய மைத்துனர் முத்தையா செட்டியாரும் அவர் தம்பி சோமசுந்தரம் செட்டியாரும் கோலாலம்பூரில் இருந்தார்கள். நான் அந்தஊர்களையும், பிரேசர்மலை, சிங்கப்பூர், ஈப்போவை அடுத்த வென்னீர் ஊற்று முதலியவைகளையும் பார்த்துக்கொண்டு இந்தியா வந்து சேர்ந்தேன். இங்கு வந்தபின் முதலாளி மு.அ.(ராஜா) பேரில் போட்டிருந்த வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதை அடுத்து சாக்ஷிகளை கூட்டிப்போவது சம்மந்தமான வேலைகளை கவனித்து வந்தேன். அவைகளைப்பற்றி இங்கு விவரிக்கஇடங்கொள்ளாது. அந்த வழக்கில் நம் தரப்புக்கு S. சீனிவாச ஐயங்கார் அவர் மகன் பார்த்தசாரதி, திருவேங்கடாச்சாரி, S. துரைசாமி ஐயர் சிவகங்கை M. S. ராமசாமி ஐயர் அவர் மாப்பிள்ளை ராமபத்திரன், மதுரை லெட்சுமிநாராயண ஐயர் முதலியவர்களும், ராஜா தரப்பில் நியூஜண்ட் கிராண்டு, அல்லாடிகிருஷ்ணசாமி ஐயர், பதஞ்சலிசாஸ்த்திரி முதலானவர்களும் ஆஜரானார்கள் அந்தகேஸ் WordsWorth என்ற ஜட்ஜ் முன் நடந்தது. கடைசியாக வழக்கை ராஜி செய்து 1937ல் முதலாளிக்கு ரூ 30 லெட்சம் ராஜா கொடுத்தார்கள்.

நான் மறுபடி 1937ல் செய்கோனுக்குப் போய் முத்தையாவை ஊருக்கு அனுப்பினேன். முத்தையா மறுபடி கிழச்செவல்பட்டி எ. நா. மு. கடைக்கு ஏஜண்டாக வந்தார்கள். 1938ல் நடந்த ஒரு நிகழ்ச்சி நான் ஒரு பத்திரம் கோர்ட்டு ஆர்டர் ரிஜிஸ்டர் செய்ய வேண்டியிருந்தது. அங்கு பத்திரம் எழுதுவது நொத்தேர் என்ற அரசு அதிகாரம் பெற்றவர்கள். நான் கொடுத்த பத்திரத்தை அந்த

நொத்தேர் காலதாமதம் பண்ணிக் கொண்டிருந்தார். காரணம் கேட்டதற்கு அவர் "ஒருமாதிரி வாசகம் எழுதினால் ஸ்டாம்பு கட்டணம் குறையும் அவ்விதம் எழுதினால் உரிமை பாதிக்கப் படுமோ என்று சந்தேகமாக இருக்கிறது. அதனால் சட்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்றார். அந்தப் பத்திரம் பதிய வேண்டிய ரிஜிஸ்ட்ரார் ஏற்கனவே கிரிதி ஆலோங்தொர்மில் இருந்த வலேத் என்றார். அவரை எனக்குத் தெரியும் என்றேன். உடனே நொத்தேர் கட்டை என்னிடம் தந்து "அவரையே கேட்டு விடு" என்றார். அது போல் வலேத்திடம் போனேன். முதலில் பழைய விஷயங்களைப் பேசி விட்டு கட்டை அவரிடம் கொடுத்தேன். அதைப் பார்த்ததும் அவருக்கும் நொத்தேர் சொன்ன சந்தேகம் வந்து விட்டது அவர் சட்டப் புஸ்தகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது மேற்படி இன்ஸ்பெக்ஷன் டிபார்ட்டுமெண்டிலிருந்துஇரண்டு பேர் வந்தார்கள். மூவரும் கலந்து பேசி பத்திரத்தை திருத்தி என்னிடம் வலேத் தந்தார். அப்போது குறைந்த கட்டணம் கட்டும்படி திருத்தியிருக்கிறேன். ஆனால் உரிமையை பாதிக்காது" என்றார். சிநேகத்தைப் பொறுத்து நான் ஒன்று கேட்கலாமா என்றேன். கேள் என்றார். நான் " நீங்கள் அரசாங்க அதிகாரி. அரசாங்க நலனைத்தானே கவனிக்க வேணும். கட்டணம் குறைவாக இருக்க நீங்கள் திருத்துவது அரசாங்க வருவாயைப் பாதிக் காதா" என்றேன். அவருக்குக் கோபம் வந்துவிட்டது. "நீ புரியாதவன். ஜனங்களை கொள்ளையடிக்க நாங்கள் இல்லை அவர்களுக்கு உதவிசெய்ய நாங்கள் இருக்கிறோம் ஜனங்களுக்குச் சட்டம் தெரியாது அதனால் நாங்கள் உதவி செய்கிறோம். இந்தப் பத்திரமும் சட்டப்படி தானே திருத்தி யிருக்கிறேன்" என்றார் அவர் சொன்ன ஆங்கிலம் "you are ignorant We are not have to plack money from the, public The public do not know law I have corrected this docuement according to law இதைக்கேட்டதும் நான்

அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வந்தேன். இதை எதற்காக சொல்லவந்தேன் என்றால் பிரெஞ்சுக்காரர்கள் அவ்வளவுநல்லவர்கள். நம்நாடாக இருந்திருந்தால் எவ்வளவு அதிகமாகக்கறக்க இயலுமோ அவ்வளவு கறந்து வருமானத்தைத் தங்கள் இலாகாவில் காட்டி தங்கள் பதவி உயர்வுக்கு வழிதேடுவார்கள்.

பிரெஞ்சு உயர் நீதிமன்ற நீதிபதியாயிருந்து நமக்குப் பழக்கமுள்ளவர்களாக இருந்தால் எந்த இடத்திலும் சாலையில் கண்டால் கூடக் கைகுலுக்கி ''சௌக்கியமா'' என்று கேட்பார்கள். அதற்காக வழக்கு என்று வந்தால் நியாயம் தான்செய்வார்கள் இதைச்சொல்லும் போது 1935ல் நடந்த ஒருநிகழ்ச்சி ஞாபகம்வருகிறது. பலவான்குடி வெ.மெ காசிச் செட்டியார் பிரெஞ்சுக்காரர்களிடையே செல்வாக்குஉள்ளவர் மொத்தே நர்போங் என்ற உயர்நீதிமன்ற நீதிபதி அவர் வீட்டிற்குஅடிக்கடி வருவார். காசிச்செட்டியாரிடம் கொத்தமங்கலம் சோமசுந்தரம் செட்டியார் மூன்று வருஷத்துக்கு சம்பளம்பேசி வேலை பார்த்து வந்தார் ஏதோ காரணத்தால் காசி செட்டியார் சோமசுந்தரம் செட்டியாரை இடையில் விலக்கிவிட்டார் சோமசுந்தரம் செட்டியார் பாக்கி வருஷத்துக்குஉள்ள சம்பளம் வேணுமென்று காசிச்செட்டியார் மேல் பிராது போட்டார். அது கீழ்க்கோர்ட்டில் சோம.வுக்கு சாதகமாக தீர்ப்பு ஆயிற்று. அதன் மேல் உயர்நீதிமன்றத்தில் கா. மனுப் போட்டார். அந்த மனு இந்த மொத்தே நர்போங் முன்பு வந்தது. அந்த ஜட்ஜ் கா.வுக்கு வேண்டியவரானதால் என்ன ஆகுமோ என்று எல்லாரும் பயந்தார்கள். ஆனால் அந்த ஜட்ஜு கீழ்க் கோர்ட்டு தீர்ப்பை உறுதி செய்தார். அன்று தினம்நான் கா. வீட்டில் விருந்துக்கு போயிருந்தேன். கோர்ட்டிலிருந்து வந்த கா. "தம்பி இந்த மொத்தே நர்போங் கீழ்க்கோர்ட்டு தீர்ப்பை உறுதி செய்து விட்டார்." என்று கோபத்தோடு சொன்னார். நான் ஒன்றும் சொல்லவில்லை. அன்று மாலை மேற்படி ஜட்ஜு கா. வீட்டிற்கு வந்து ''காசி, நீ பணக்காரன்'' அவன் சம்பளம் வாங்கிப்

பிழைப்பவன். மூன்று வருஷத்துக்கு இடையில் தனக்குவேறு இடத்தில் சம்பளம் கூட வருகிறது. நான் போகிறேன் என்று சொன்னால் நீ விடுவாயா ஒப்பந்தப்படி நீ மூன்று வருஷம் வேலை பார்க்கவேண்டும் என்று வற்புறுத்துவாயல்லவா யோசித்துப்பார் என்று சமாதானம் சொல்லிப்போனார்.

இதை நினைக்கும்போது இங்கிலீஷ்காரர்களை பற்றியும் ஞாபகம் வருகிறது அவர்கள் அகங்காரம் உள்ளவர்கள். ஒரு எடுத்துக்காட்டு செய்கோனில் chartered Bank, Hongkong Bank di Bank d I 'Indoline இவைதான் பெரியவை. நம்மவர்கள் பெரும்பாலும் chartered Bankல் தான் கணக்கு வைத்துக்கொள்வதுண்டு அந்த சார்ட்டர்டு பாங்குஏஜெண்டுTansfieldஎன்றஒருஇங்கிலீஷ்காரன் அவன் அறையில் பார்க்கப் போகிறவர்களுக்கு உட்கார இருக்கை கிடையாது. போகிறவர்கள் நின்று கொண்டுதான் பேச வேண்டும். அவன் உட்கார்ந்திருப்பான். நமக்கு மட்டுமல்ல இங்கிலீஷ் கெவர்ண்மெண்டு Consul வந்தாலும் அதுதான் மரியாதை அந்த பாங்கில் ரூ 450 000% எங்கள் முதலாளி பணம் இருந்தது அதற்கு 4% வட்டி போட்டுக் கொண்டிருந்தார்கள். ஒருமுறை நான் Hongkong Bankக்கு ரூ $4\frac{1}{2}$லெட்சத்துக்கு என்னவட்டி தருவீர்கள் என்று எழுதிக்கேட்டேன். $5\frac{1}{2}$% தருவதாகப் பதில் வந்தது. அதை முதலாளிச்கு எழுதி அந்தப்பணத்தை Hongkong Bankக்கு மாற்ற அனுமதி கேட்டேன். அவர்களுக்கு மதறாஸ் Chertered Bank ரெம்ப பழக்கம். நான் எழுதியதை அவர்களிடம் சொல்ல, அவர்கள் செய்கோனுக்கு சார்ட்டர்டு பாங்குக்கு எழுதியிருக்கிறார்கள். அதன் பேரில் மேற்படி பாங்கிற்கு வந்து சந்திக்கும்படி கந்தோவுக்கு லெட்டர் வந்தது அதன்படி நான் போய்ப் பார்த்தபோது மேற்படி ஏஜெண்டு Tansfiled "எந்த பாங்கு உனக்கு $5\frac{1}{2}$% தருவான். நீ பொய் சொல்கிறாய் என்றான் உடனே நான் Hongkong Bank லெட்டரை காண்பித்தேன்.

உடனே அசந்துபோனான். அவனும் 5½% தர ஒத்துக் கொண்டான். பொதுவாக ஆட்கள் மொழி பெயர்த்துச்சொல் வதற்காக என்னை CharteredBankக்கும்HongkougBankக்கும் கூட்டிப்போவார்கள் அது முதல் அந்த Tansfield என்னிடம் இணக்கமாகவே நடந்து கொள்வான். ஒருமுறை முதலாளி ஆர்டர்படி ரூ 4½ லெட்சம் 173 விலை (100 வெள்ளிக்கு 173 ரூபாய்) க்கு Banglore Indian Bankக்கு அனுப்பினேன் அப்போது அந்த Tansfield "நீ அனுப்புவது உனது தனது நிகழ்ச்சியா(Sobjayinsrance)அல்லதுசெட்டியார்கள் எல்லா ருக்கும்தெரியுமா என்று கேட்டான். நான் Sobjay instance என்றுபதில் சொன்னேன் ஏனென்றால்செட்டியார்கள் பணம் அந்தபாங்கில் நிறைய உள்ளது எல்லாரும் அனுப்ப நினைத் தால் அதற்கு தகுந்த ஏற்பாடு அவன் செய்துகொள்ள வேண்டிவரும்.

நான் 1937ல் செய்கோன்போய் 1940 ஜுன் மாதம் இந்தியா வந்தேன். இந்தியாவிலும் முதலாளி வீட்டு வேலை யாய் சில்லத்தூர் ஜெமின் கானாடுகாத்தான் மதராஸ் ஆபீஸ் களிலும் வேலை பார்த்தேன். சென்னையில் Eastern Commercial Corporation என்ற மொத்த ஜவுளி வியாபாரம் கோடௌண் தெருவிலும் வள்ளிஸ்டோர்ஸ் என்ற சில்லரை வியாபாரம் திருவல்லிக்கேணியிலும் நடத்தி வந்தேன். அப்போது சில்லத்தூர் ஜெமீனில் ராகவேந்திரராவ் B A., மானேஜராக இருந்தார். மேற்படி ஜெமீனில் சில்லத்தூர், வெங்கரை, மதன்பட்டூர் என்ற பல கிராமங்கள் உண்டு மொத்தம் 12000ஏக்கர். ஆபீஸ்வெங்கரையில்தான் மேற்படி மானேஜர் பேரில் அநாமதேய கடிதங்கள் வந்தன. அதை விசாரிக்க அமராவதி புதூர் நாராயணன் செட்டியாரை அனுப்பினார்கள். அவரால் முடியவில்லை என்று என்னை அனுப்பினார்கள் நாங்கள் வெங்கரையில்தங்கியிருந்தஜெமீன் ஆபீசும் மானேஜர் வீடும் ஒரே காம்பவுண்டுக்குள் தான் ஆனால் ஊரே ஒரு சுவர். ஒருவரை ஒருவர் பார்க்க முடியாது

பேசினால் கேட்கும் மானேஜர் அவர் வீட்டிலிருந்துகொண்டு "முதலில் ஒரு செட்டி வந்தான் இப்போது இன்னொருசெட்டி வந்திருக்கிறான். கிராமத்தைப்பற்றி இவன்களுக்கு என்ன தெரியும்" என்று பேசுவார். நாராயணன் செட்டியார் ஆத்திரப்படுவார். கிராமக்காரன்கள் சமத்தர்கள் ஒவ்வொரு வரையும் ஆழம் பார்த்துத்தான் பழகுவார்கள். இயற்கையாக நாங்கள் அந்த இடத்துக்குப்புதிது அதனால் எங்களிடம் எவனும் நெருங்கமாட்டான். இந்த நிலை நாங்கள் மானேஜ-ருக்கு எதிராக எப்படி துப்பு வெட்ட முடியும் கணக்குகாரியம் எல்லாம் விஜயராகவ ஐயங்கார் பார்த்து வந்தார். ரெம்ப கெட்டிக்காரர் கிராம சம்பந்தமான ஒரு விஷயத்தை நாம் பார்க்கும்போதே நாம் கேட்கப் போகும் அடுத்த விஷயத்தை தயாராக வைத்திருப்பார். கொஞ்ச நாளில் கிராமத்தார்கள் என்னை புரிந்துகொண்டு நெருங்கிவந்துபேச ஆரம்பித்தார்கள் அவர்கள்மூலம் நான் தெரிந்துகொண்டது. மானேஜர் எடுத்-துக்கொண்டது ரூ.1000/- தான் மாடுவாங்கியதில்ரூ.500/ ம் கண்மாய் வெட்டு விட்டதில் ரூ. 500/- ஆகரூ. 1000/-தான் இதன் உண்மையை அவரிடம் கேட்க சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்தேன் அவரும் வரவர என்னிடம் சற்று நெருக்கமாக பழகிகொண்டு வந்தார் - நானும் அவரும் ஒரு முறை வெங்கரையிலிருந்து சில்லத்தூர் (12 மைல்) போய் திரும்ப மாட்டுவண்டியில் வந்து கொண்டிருந்தோம்-அது சமயம் நான் அவரிடம் "சார் நான் ஒன்று கேட்கலாமா என்று நினைக்கிறேன். நீங்கள் தவறாக நினைக்கக்கூடாது. உண்மை தெரிவதற்காக கேட்கிறேன்" என்றேன். நீங்கள் கேட்பது எனக்குத்தெரியும். எவன்என்னை அவ்விதம் செய்யச் சொன்னானோ அவனே உங்களிடம் தகவல் சொல்லியிருக்கிறான். நான் கெவர்ண்மெண்டு வேலைக்குப் போயிருந்தால் நான் இன்று தாசில்தாராக ஆகி இருப்பேன் பெரிய ஜெமீன் மானேஜர் என்ற பெயருக்கு ஆசைப்பட்டு விட்டுச்செலவுக்குக்கூட நகைகளை ஈடு வைத்திருக்கிறேன்" என்றார். அந்த மானேஜர் குடிகளிடத்தில் செல்வாக்கு

உள்ளவர். கெட்டிக்காரர் கிராமநிர்வாகம் தெரிந்தவர். இந்தச் சிறுகுற்றத்திற்காகஅவரை விலக்குவது நமக்கு நன்மையில்லை இவரைப்போல்திறமைஉள்ள வேறுஆள் கிடைப்பதுகடினம் இதுஎன்னுடையமுடிவு இதையேமுதலாளியிடம்சொன்னேன் அவர் மறுபடியும் பல வருஷங்கள் மானேஜராக இருந்தார். எனக்கு நெருங்கிய நண்பராகவும் இருந்தார். 1937ல் செய்கோன் போய் 1940 ஜூன் மாதம் நானும் கோட்டையூர் அழகப்ப செட்டியார், கூத்தலூர் ஆறுமுகம் செட்டியார், கண்டவராயன்பட்டி சோமசுந்தரம்செட்டியார் இன்னும் பலர் கம்போசா பத்தம்பாங்வழியாக சயாம் தலைநகர்Bangkokக்கு வந்தோம். வழியில் அந்த Photo இருக்கிறது அங்கோர்வாட் பார்த்தோம். Bangkokல் K.T.S. மரைக்காயர் வீட்டில் எங்களுக்கு விருந்துவைத்தார்கள். சைவச்சாப்பாடு சமையல் முஸ்லீம் அவர் வைத்த கீரைமசியல் அவ்வளவு ருசி பழம் மாமபழம், வாழை பிலாச்சுளை, டொரிப்பான், லப்டான். வங்குஸ்தான் என்ற பலவகை மறக்கமுடியாத விருந்து' மறுநாள் நானும் அழ. வும் பினாங்கு புறப்பட்டோம். மற்றவர்கள் செய்கோன்போய்விட்டார்கள். பினாங்கிலிருந்து நாங்கள் ஊர்வந்தோம். 1944ல் சண்டை சமயம்.அரசாங்கம் மொத்த வியாபாரிகளை நியமித்து நெல் கொள்முதல் செய்து ரேஷன் கடைகளுக்கு சப்ளை செய்து கொண்டிருந்தார்கள் அதுபோல் திருவாடானை தாலுகாவுக்கும் முதுகுளத்தூர் தாலுகாவில் சில இடங்களுக்கு நெல் கொள்முதல் செய்யும் லைசென்சை தொண்டி கான்சாஹிப் MR.P. SyedMohamed Rowther வாங்கியிருந்தார். 1945பிப்ரவரியில் அவருக்குபண உதவிசெய்யும்படி கானாடுகாத்தான் CV.CT. வெங்கடாசலம் செட்டியார் எங்கள் முதாளியை கேட்டார். அவர்கள் ஒத்துக் கொண்டு வியாபாரத்தில் M. R. P. S.க்கு 10 அணா பங்கும் எங்கள் முதலாலளிக்காக அவர்கள் தமக்கை புருஷன் கடியாபட்டி சொ.தி.சொ.முத்தையாசெட்டியார்பேரால்6அணு பங்கும் வைத்துக் கொள்வதாக ஒப்புக் கொள்ளப்பட்டது' பணம் சுமார் 20 லட்சம் வரை கொடுப்பது இதற்கு

காரைக்குடி United Commercial Bankல் ஏற்பாடு செய்து Key loan & Open loanக்கு வட்டி4% என்று தீர்மானிக்கப் பட்டது இந்தப் பாங்கு கணக்கை நான் Operate செய்ய MR PS ம் சொதீ. மூவும் authorisation லெட்டர் Bankக்கு கொடுத்திருந்தார்கள். Margin தொகைக்கு எங்கள்முதலாளி சொந்தப் பண 5½ லெக்ஷம் கொடுத்துகியாரண்டியும் செய் திருந்தார்கள். இந்த வியாபாரத்துக்கு தலைமை அலுவலகம் தேவகோட்டை மின்சார கம்பெனிக்கு போகும் வழியில் உள்ள பெரிய காம்பவுண்டு தொண்டி, சருகணி, மங்கலக்குடி பாண்டுகுடி, முப்பையூர், திருவேகம்பத்து. ஆனந்தூர் முதுகுளத்தூர், என்று மொத்தம் சுமார் 40 இடங்களில் நெல் கொள்முதல் செய்து ரேஷன் கடைகளுக்கு நெல் சப்ளை செய்யப்பட்டது. வியாபாரத்தை MR.PS.க்காக நடேசய்யர் என்பவரும் MRPS மைத்துனர் நெ. கா என்ற முஸ்லீமும் கவனித்து வந்தார்கள். தேவகோட்டைக்கு நாங்கள் அரிசி யாக சப்ளை செய்தோம். மற்ற இடங்களில் நெல்லாகவே கொடுத்து வந்தோம். District Supply Officer சிவசங்கரம் பிள்ளை. Taluk Supply Officer Norman Firka Supply Officerகள் பல பேர். கவர்ண்மெண்டு தரப்பில் அடிக்கடி சோதனை போடுவார்கள். Bankல் பணம் வாங்கு வதற்கு நெல் ஸ்டாக் காட்டி அதன் பேரில் தான் பணம் பற்ற முடியும் அதற்காக ஒவ்வொரு ஊரிலிருந்தும் தினசரி நெல் கொள்முதல் எவ்வளவு விற்று முதல் எவ்வளவு என்ற விபரங்கள் தேவகோட்டை HOவுக்கு வரும். இந்த கணக்கு களை எழுத HOவில் கானாடுகாத்தான் சுப்பிரமணியன் அண்ணாமலை, குழந்தையன் செட்டியார். புதுவயல் நாச்சியப்பன், தேவகோட்டை ராமனாதன், மற்றும் ராமனாதன் செட்டியார் என்ற பல கணக்குப் பிள்ளைகள் இருந்தார்கள் வியாபாரம் சுமாராக நடந்து கொண்டிருந்த சமயம் MRPS மதராஸ் சட்டசபைக்கு முஸ்லீம்லீக்டிக் கட்சி வேட்பாளராக நின்று தோற்றுவிட்டார். அதனால் அவர் உடல் நிறம் பாதிக்கப்பட்டது. தொண்டியிலேயே அவர்

இருக்க வேண்டியதாயிற்று. அந்த சமயம் ஒருநாள் நடேசய்யர் M.R.P.S தலைமைஅலுவலகத்தைத் தேவகோட்டை யிலிருந்து தொண்டிக்கு மாற்றச் சொல்வதாகச் சொன்னார். நான் பாங்குக்கு அடிக்கடி போக வேண்டியிருப்பதால் Bank Balance குறைந்தவுடன் மாற்றுவோம் என்று சொன்னேன். அவர் பதில் ஏதும் சொல்லவில்லை. இதற்கு சில தினங்கள் சென்று தைப் பொங்கல் வந்தது. அதற்காக தலைமை அலுவலகத்தில் இருந்த கணக்குப் பிள்ளைகள் ஊர் போய் விட்டார்கள். பொங்கல் அன்று நானும் ஆபீசுக்குப் போகவில்லை நெ. கா. மட்டும் தான் ஆபீசில் இருந்தார் பொங்கல் மறுநாள் ஆபீசுக்குப் போனேன் அன்று வந்த கடிதங்கள் ஸடாக்லிஸ்ட்டுகளை நெ கா. தந்தார் அதில் ஒரு கடிதம் "HOவை தொண்டிக்கு மாற்றும்படி முதலாளி உத்தரவு செய்திருக்கிறார்கள். "என்று ரெங்கசாமி எழுதிய லெட்டர் இருந்தது. அதையும் பார்த்து விட்டு இது ஏற்கனவே சொன்ன விஷயம் தானே என்று நினைத்து லெட்டர்களைக் கீழே வைத்தேன். நெ. கா. "தொண்டி லெட்டரைப் பார்த்தீர்களா" என்றார். நான் தான் Bank Balance குறைந்தவுடன் மாற்றுவோம் என்று நடேசய்யரிடம் சொல்லி விட்டேனே" என்றேன். அதற்கு அவர் நேற்று வண்டியும் அனுப்பியிருந்தார்கள். அதில் கணக்குப் புத்தகங் கள் மற்றும் அங்கு இருந்த சகலத்தையும் அனுப்பிவிட்டேன் என்றார். அனுப்பியதற்கு லிஸ்ட்டு இருக்கிறதா என்றேன் இதோ இருக்கிறது என்று அவர் கைப்பட எழுதியலிஸ்ட்டை தந்தார். எனக்கு ஒரே அதிர்ச்சி. என்ன செய்வதென்று புரியவில்லை. நான் வீட்டில் இருக்கிறேன். என்னிடம் சொல்லாமலேயே அனுப்பியிருக்கிறார். பொங்கலுக்காக கானாடுகாத்தான் வந்திருந்த முதலாளியைப் போய்ப் பார்த் தேன். அவர்கள் நமது 5½ லெக்ஷம் புரோநோட்டில் ஒன்றை வழக்குப் போட்டு எல்லா நெல்லையும் attach செய்யச் சொன்னார்கள். அது ஏற்கனவே Key and openல் Bankக்கு Security இருக்கிறது. அதனால் நாம் attach

செய்வது பயனில்லை தவிர இன்னும் பல காரணங்களால் அது உசிதமாகப்படவில்லை நான் உடனே செக்காலையில் இருந்த UCO Bankஏஜண்டு சீனிவாசனை சந்தித்துவிஷயங் களைச் சொல்லி "பணம் யார் கொண்டு வந்தாலும் வாங்கிக் கொள்ளும்படிக்கும் என் லெட்டர் இல்லாமல் மூட்டையை delivery கொடுக்க வேண்டாமென்றும் சொல்லி வந்தேன். தொண்டிப் பக்கம் ரேஷன் கடைகளுக்கு நெல் கொடுப் பதற்குKey loan நெல் தேவைப்பட்டது. நான் தொண்டிக்கே போகாததால் நெ. கா. ரூ. 60000/- Bankல் கட்டி மூட்டை கேட்டிருக்கிறார். அவர்கள் என் லெட்டர் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். பணத்தைத் திருப்பிக் கேட்டிருக் கிறார். கணக்கில் வரவு வைத்தாச்சே என்றிருக்கிறார்கள். அப்போது தான் என்னுடைய அவசியம் அவருக்கு தெரிந் திருக்கிறது. உடனே அவர் தொண்டிபோய் ரூ 50000/- சி. செ. மு. என்பவரிடம் கொடுத்தனுப்பி 500 மூட்டை என்னை பாங்குக்கு கூட்டிப் போய் delivery வாங்கும்படி சொல்லி அனுப்பினார். சி. செ. மு. நல்லவர். அவர் ஆபீஸ் போய்ப் பார்த்து நான் இல்லாததால் வீட்டிற்கு வந்தார். இதையும் விட்டுவிடக் கூடாது என்று நினைத்து நானும் அவருடன் போனேன் அவர் வந்தது Austin Tower கார். நல்ல ராசியான கார். கான்சாஹிப் அதில் தான் மூலை முடுக்கெல்லாம் போவார். நாங்கள் கொண்டு போன நோட்டு சில்லரை நோட்டுக்கள். சாக்கில் போட்டுத்தான் கொண்டு போவது வழக்கம். அதை எண்ணுவதற்கு சுமார் 40 நிமிஷம் பிடிக்கும் அதுபோல் இப்போதும் நோட்டு எண்ணிக் கொண் டிருக்கும் போது நான் சற்று வெளியில் போய் வருவதாகச் சொல்லிவிட்டு வெளியில் வந்து சமீபத்தில் என் பெரிய தகப்பனார் பேரன் திருநாவுக்கரசுவிடம் ஒரு சீட்டு Bank Managerக்கு 'நான் மூட்டை கேட்டாலும் நீங்கள் கொடுக்க வேண்டாம் "என்று எழுதி மானேஜரை வெளியில் கூப்பிட்டு இதைக்காட்டிவிட்டு வந்து விடு என்று சொல்லி

யனுப்பினேன் அவன் அது போல் செய்து வந்தான் சிறிது நேரம் சென்று நான் பாங்கிற்குப் போய் நோட்டுக்கள் எல்லாம் எண்ணிய பிற்பாடு 500 மூட்டை delivery கேட்டேன். அவர் "open loan மூட்டைகள் எல்லாம் தீர்ந்துவிட்டதாகத் தெரிகிறது. அந்தப்பணம் வரவாகவில்லை. Bank Balance அதிகமாக இருக்கிறது. விற்ற பணங்கள் வந்து அது குறைந்தால் தான் delivery தரமுடியும் என்று சொல்லிவிட்டார். இந்தவிபரம் சி.செ.மு. தொண்டி போய் சொன்னவுடன் ஆஸ்டின் காரை அனுப்பி என்னை கூப்பிட்டனுப்பினார்கள். நான் மறுநாள் வருவதாக சொல்லி, மற்றொரு பங்குக்காரர் சொ. தீ. மு. அவர்களை கூட்டிக்கொண்டு அவருடைய ஆஸ்டடின் காரில் தொண்டி போனோம். முதலில் கான்சாயபு வீட்டிற்கு போனோம். எப்போதும் எங்களை உபசரிக்கும் அவர் அன்று தனக்கு உடம்பு சரியில்லை. நடேசய்யரைப் பாருங்கள் என்றார். நடேசய்யர் வீட்டிற்கு போனோம். மூட்டை டெலிவரி தருவதற்கு Bank ஏன் தகரார் செய்கிறது என்றார். நான் விற்ற பணங்கள் Bankக்கு போகவில்லை Balnce அதிகமாக இருக்கிறது. நெல் Stockம் இல்லை என்றேன். உடனே ரெங்கசாமி என்பவனைக் கூப்பிட்டு கோவிப்பது போல் பாசாங்கு செய்து MRPSயிடமுள்ள பணத்தை உடனே வாங்கி வரும்படி சொன்னார் (அவன் நெல்விற்ற பணம் MRPSயிடம் இருப்பதாக சொன்னான்) இதற்கு முன்னால் எங்களுக்கு நடந்த உபசாரம் இந்தத் தடவை இல்லை மாலை 4மணிக்கு போன நாங்கள் 6மணி வரை காத்திருந்தோம். பணம் வாங்கப் போனவன் வரவில்லை நாங்கள் நாளை பணத்தைஅனுப்புங்கள் என்றுசொல்லிவிட்டு எங்கள் காரில்புறப்பட்டோம் அதுசமயம்ரெங்கசாமிஒருசாக்குமூட்டையை எங்கள் காரில் போட்டு ஒரு சீட்டுத் தந்தான் அதன்படி சில்லரை நோட்டுக்களாக ரூ 50000/ தான் இருந்தது இதற்கு மத்தியில் தொண்டியிலிருந்த openloan நெல்லை தேவிபட்டணத்திற்கு படகில் அனுப்பி ராமனாதபுரம்

ரேஷன் கடைகளுக்கு சப்ளை செய்து கொண்டிருந்தார்கள் அங்கு நடேசஐயர் தம்பி மானேஜர் நரசிம்மய்யர் நான் தேவகோட்டை வந்தவுடன் ராமனாதன் செட்டியார் என்ற கணக்குப்பிள்ளையை தேவிபட்டணத்துக்கு அனுப்பி அங்கு உள்ள பணத்தை கொடுத்தனுப்பும்படி நரசிம்மய்யருக்கு லெட்டர் கொடுத்தனுப்பினேன் அவர் H.O. தொண்டிக்கு வந்துவிட்டகால் அங்கு அனுப்பி விட்டதாக சொல்லிவிட்டார் தொகை சுமார் 2லட்சம் இதைக்கேட்டவுடன் எனக்கு இந்தப் பணத்தை முதலாளிக்கு எப்படி கொடுக்கப் போகிறோம் என்ற கலக்கம் தேவகோட்டை ரேஷனுக்கு சப்ளை செய்த பணம் சுமார் லேட்சம் தேவகோட்டையில் இருந்ததை நான் கானாடுகாத்தானுக்கு டெலிபோன் செய்து ஏஜண்டு குப்பான் செட்டியார் முதலாளிக்கு கொடுக்க வேண்டிய 5½ லட்சும் ரூ புரோ நோட்டுக்கு பணத்தைக் கொடுத்து புரோ நோட்டை வாங்கி வைத்துக் கொண்டேன் தேவகோட்டை கணக்கில் பணம் என்வசம் என்று மட்டும் போட்டுக்க சொன்னேன் இந்த நிலையில் ஒரு நாள் நெ.கா. வந்து இங்கு வசூலான தொகை என் வசம் இருக்கும் 5½ லெக்ஷத்துக்கு விபரம் சொன்னால் தேவலை என்றார். நான் தொண்டியில் இருக்கும் 3லெக்ஷத்திற்கு விபரம தெரிகிற பே து இதற்கும் விபரம் தெரியும் என்றேன். இதைக் கேட்டதும் அவருக்கு அதிர்ச்சியாயிற்று. உடனே அவர் தொண்டி பேய் சொன்னவுடன் ஆஸ்ட்டின் காரை அனுப்பி என்னை தொண்டிக்குக் கூட்டிப் போனார்கள். கான்சாயபூவீட்டிற்குத் தான் போனேன். போன தடவை எங்களைப் பார்க்க விருப்பமில்லை, இந்தத் தடவை அவர் வீட்டிற்குள் இருந்து வெளியில் வந்து "வேனா. நான் தேவகோட்டை ஆபீசை தொண்டிக்கு மாற்ற வேண்டாம் என்று தான் சொன்னேன் இந்த ஆட்கள் நான் செத்துப் போய் விடுவேன் நீங்கள் எல்லாவற்றையும் கானாடுகாத்தான் கொண்டுபோய் விடுவீர்கள் என்று சொல்லி இங்கே மாற்றிவிட்டான்கள். நீங்கள் தவறாக நினைக்க வேண்டாம், ஆனால் நான் ஒன்று

சொல்கிறேன். என்னுடன் கூட்டுச் சேர்ந்த உங்கள் முதலாளிக்கு லாபம் என்று நான்தான் அவர்களுக்கு கொடுக்க வேண்டும். அவர்களிடம் நான் வாங்குகிறாற் போல் வைத்து விடாதீர்கள். எனது எலக்ஷன் செலவு ரூ 30000/- என்பற்று வழி பாக்கி இதோ என்று ரூ2½ லெக்ஷம் தந்தார். அதை வாங்கி பாங்கிற்கு கட்டி அனேகமாய் கணக்குத் தீர்ந்து விட்டது. நான் அப்புறம் தொண்டிக்கே போக வில்லை. ஒருநாள் கணக்குப் பார்க்க MRPS நடேசய்யர் முதலானவர்கள் கானாடுகாத்தான் வந்தார்கள். கணக்குப் படி ரூ 128000 – லாபம் அதில் எனக்கு ரூ 8000 நான் சம்பளமாக எடுத்துக் கொண்ட ரூ 3000 கழித்து ரூ 5000- தந்தார்கள். இத்துடன் 1945ல் இந்த நிகழ்ச்சி முடிவுற்றது.

1940 ஜூனில் நான் இந்தியா வந்த சமயம் முதலாளி பெங்களூரில் இருந்தார்கள். அப்போது கருப்பட்டி லெ. லெட்சுமிபுறம் சொ மு. பெ அரு. இவர்கள் முதலாளிக்கு கொடுக்க வேண்டிய பணங்களுக்கு கணக்கு செட்டில் செய்யப்பட்டது.

1947 ஜனவரியில் மறுபடியும் செய்கோன் போய் அங்கு இருந்த பெத்த பெருமாளை ஊருக்கு அனுப்பினேன். என்னுடன் துரைராஜ் என்ற கணக்கப் பிள்ளையை அடுத் தாளாகக் கூட்டிப் போனேன். செய்கோனிலிருந்து கந்தோவுக்கு சாதாரண பஸ் முன்போல் கிடையாது. Miltary Convoy இராணுவ ஊர்திகள் செல்லும் போதுதான் அதில் நாங்கள் போக முடிந்தது, காரணம் வியட்மின் கலகக்காரர்கள் சுட்டுக் கொண்டிருந்தார்கள். நான் ஒரு மந்திரியின் காரில் Convoyயுடன் போனேன். கந்தோவிலும் நிலமை சரியில்லாததால் மறுபடியும் செய்கோன் வந்து விட்டேன். என்னை நகரத்தார் சங்கத்து தலைவராக தேர்ந் தெடுத்தார்கள் கண்டவராயன்பட்டி மாணிக்கம் செட்டியார் காரியதரிசி. அது சமயம் நாடி முத்துப்பிள்ளை M.P. அங்கு

வந்தார். செய்கோனுக்கு புதிதாக Indian Consul Office ஏற்பட்டு V.N. Mehta வந்திருந்தார். மாதவன் குட்டி என்பவன் கிளார்க் நாடி முத்துப் பிள்ளைக்கு நமது கோவிலில் வரவேற்பு அளித்தோம். அந்த புகைப்படம் இருக்கிறது அந்த கான்சல் V. N. Mehta அகம்பாவம் பிடித்தவன். எனக்கும் அவனுக்கும் சண்டை அது சம்மந்தமாக நான் அவனுக்கு எழுத நினைத்த லெட்டரை அனுப்ப வேண்டாமென்று நாடி முத்துப்பிள்ளை சொன்னார். அந்த நகல் இருக்கிறது எனினும் மேற்படி Consul சங்கம் எனக்கு அளித்த வழியனுப்பு விழாவில் கலந்து கொண்டான். அந்த Photo இருக்கிறது நாடி முத்துப் பிள்ளை இந்தியா கவர்ண்மெண்டுக்கு ஒரு அறிக்கை கொடுத்தார். அந்த பிரதி இருக்கிறது. அதில் கண்ட Exchange சம்மந்தமான பகுதி நான் எழுதிக்கொடுத்தேன் அங்கு இருந்த போது Greent Traters என்ற பெயரில் ஒரு வியாபாரம் செய்தேன். அப்போது சாந்தலிங்கம் முத்தையா என்ற புதுச்சேரிக்காரர் எனக்கு உதவி செய்தார். ஊர் நிலமை சரியில்லாததால் துரைராஜுவிடம் பொறுப்பை ஒப்புவித்தேன். சங்கத் தலைமையை பி. கு. நா. ஏஜண்டு அமராவதிபுதூர் சிதம்பரம் செட்டியாரிடம் ஒப்புவித்து விட்டு 1948ல் புறப்பட்டேன். கொழும்பு மார்க்கம் 19—7—48ல் ஊர் வந்து சேர்ந்தேன். இங்கு வந்த பின்பு முதலாளி சம்பந்தமான கானாடுகாத்தான் பட்டுக்கோட்டைசென்னை முதலிய ஊர்களில் வேலை பார்த்து வந்தேன்.

1950ல் முதலாளி சம்மந்தமாக மாங்குடி கும.கரு.லெ. நடேசன் செட்டியார் ரைஸ்மில்லை குத்தகைக்கு எடுத்து நடத்தினேன். அது லாபமாக இல்லாததால் அதை விட்டு விட்டேன். 1955ல் முதலாளி மகள் வள்ளியம்மையை அவர்கள் தமக்கை மீனாக்ஷி ஆச்சிக்கு (கடியாபட்டி சொ. தீ. சொமு) புதுவயலிலிருந்து சொக்கலிங்கம் என்ற பையனைக் கூட்டி திருமணம் செய்தார்கள். 16—6—57ல்

என் தாயார் சிவபதவி அடைந்தார்கள் 15—9—57ல் தேவகோட்டைமெ.லெ.மெதூத்துக்குடிஉப்பளம் வேலையில்சேர்ந்தேன் அதுவும்அரு. சோம. சுந்தரேசன்செட்டியார்மூலம்சேர்ந்தேன். நான் முதலாளி ராம. வேலையிலிருந்து விலகும்போது அவர்கள் "நீங்கள் போகும் இடம் உங்களுக்கு சவுரியமில்லாவிட்டால் ("You are always welcome here") உங்களுக்கு எப்போதும் இங்கு நல்வரவு உண்டு என்றார்கள். மெ.லெ மெ. விடம் சேர்ந்த இரண்டொரு மாதத்தில் முதலாளி ராம. சம்பந்தமான சுப்ரீம் கோர்ட் அப்பீல் விஷயமாக நான் டெல்லி போனேன். அந்த வழக்கு முதலாளி பேரில் அவர்கள் பெரிய தகப்பனார் சாத்தப்ப செட்டியார் பேரன் சாத்தப்பன் போட்டிருந்த மைனர் சூட்டில் Court fees சம்மந்தமான அப்பீல். அதற்கு அட்வகேட்ஜெனரல் செதல்வாட்டை ஏற்பபாடு செய்திருந்தோம். வழக்கு விசாரணைக்கு வரும் சமயம் அவர் ஹேக்கில் உள்ள சர்வதேச கோர்ட்டுக்கு போனதால் கட்டணத்தை திருப்பி தந்து விட்டார் பின்பு சொலிசிட்டர்ஜெனரல் டாப்ட்ரீயை வைத்து நடத்தினோம் வழக்கு நமக்கு அனுகூலமில்லை கோர்ட்பீஸ் விஷயம் வாதிக்கும் கோர்ட்டுக்கும் சம்மந்தப்பட்ட விஷயம் இதில் பிரதிவாதிக்கு தலையிட உரிமையில்லை என்று சொல்லி விட்டார்கள் முக்கிய ஜட்ஜு கஜேந்திர சட்டர் நான் டெல்லியில் கன்னாட்சர்க்கசில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி விருந்தினர் அறையிலும் பின்பு வடக்கு அவென்யூவில் இருந்த வேலங்குடி சுப்பையா அம்பலம் M.P. அறையிலும் தங்கியிருந்தேன். அதுசமயம் M.L.M. உப்பளத்தை கவர்ண் மெண்டு எடுத்துக் கொள்வதாக ஒரு பேச்சு இருந்தது அது விஷயமாக டெல்லியிலுள்ள Slah Commissionerபார்த்தேன் அவர் Secutariahல் உள்ள under Secretary Zaman (ஜமான்) ஐபார்க்கச் சொன்னார் Zamanஐபார்த்து அவரிடம் மேற்படி உப்பளம் சம்பந்தமாக M.L.M.க்கு தொடர்பு செலவழித்த பணம் முதலியவைகளைக்கண்டு அதை கெவர்ண்மெண்டு எடுத்துக் கொள்ளக் கூடாது என்று

ஒரு மனுக்கொடுத்தேன் அவருடைய பதில் சாதகமாகத் தோன்றவில்லை உடனே M L M க்கு தகவல் கொடுத்து டெல்லிக்கு வருத்தி இருவரும் போய் ஜமானைப் பார்த்தோம் அவர் Factoryயை எடுத்துக்கொண்டு அதில் வருகிற உப்பை நமக்கு தருவதாக சொன்னார் அதற்கு M.L M. ஒத்துக் கொள்ளவில்லை யோசித்து வருவதாக சொல்லிவிட்டு R. ராமனாதன் செட்டியார் M.P. (ராஜாசர் முத்தையா செட்டியார் தம்பி)யைசந்தித்துஅவர்மூலம்உப்பு சம்மந்தமான Deputy Minister Satish Chandra வைப்பார்த்தோம் அவர் Factoryயை தற்சமயம் எடுக்கவேண்டாம். தற்போது உள்ள apument முடிந்த பிறகு எடுக்கலாம் என்று உத்திரவு செய் தார் அந்த சமயம் அமலில் இருந்த எக்ரிமெண்டு M.L.M. மேஜரானவுடன் மேற்படிFactoryயை ஒப்புக்கொள்ளும்போது ஏற்பட்டது அதில் அந்த Factoryயை கெவர்ண்மெண்டு மேல்ப் பார்வையில் நடத்துவது என்றும் அதற்கு கெவர்ண் மெண்டு செலவுக்கு வருஷம் ஒன்றுக்கு ரூ 10000/- வீதம் M L.M. தரவேணுமென்றும் என்ற 10 வருஷ எக்ரிமெண்டு அதுவரை எக்ரிமெண்டு ஏற்பட்டு 6வருஷம ஆகியிருந்தது. Factoryயை எடுக்கவேண்டாமென்று சதீஷ்சந்திரா ஆர்டர் செய்தவுடன் மேல்கண்ட 6வருஷபாக்கி ரூ 60000/- கட்டும் படி அரசாங்கம் கேட்டது. அதுசம்பந்தமாக பலமுறை நான் மறுபடியும் டெல்லி போனேன். இந்த சமயம் தேவகோட்டை அருணாசலம் செட்டியார் M.P. யினுடைய North Avenue அறையில் தங்கினேன். மேல்கண்ட விஷயமாக சென்ட்ரல் கெவர்ண்மெண்டு Chit Seerjary ரெங்கனாதனைப் பார்க்க Selvaraj என்ற M.P.யினுடைய உதவியை நாடினேன். நான் போன சமயம் ரெங்கனாதன் மகள் ஒரு வெள்ளக்காரனை மணக்க விரும்பியதாகவும் அவர் ஒத்துக் கொள்ளாததால் தூக்குப்போட்டுக்கொண்டு இறந்துவிட்டதாகவும் கேள்வி. அதனால் கிட்டத்தட்ட ஒரு மாதம் போல் அங்கு தங்க நேர்ந்தது. அதுசமயம் நான்North Avenueவிலிருந்துSelvaraj இருந்த அறைக்கு காலையில் போய் மதியம் வரை இருந்து

பத்திரிக்கைகளைப் படித்துவிட்டு வருவேன். ஒருநாள் கல்கத்தாவிலிருந்து காந்தி என்ற ஒருவர் Steel SecratorY பூதலிங்கத்தை பார்க்க வேண்டுமென்று செல்வராஜிடம் வந்தார். Selvarajம் வேறுசில M P.களும் 80ரூ விலையுள்ள Whisky பாட்டிலை வாங்கி குடித்துக்கொண்டு பேசிக் கொண்டிருப்பார்கள். காந்தி வந்து ஒரு வாரமாகியும் Selvaraj காலம் கடத்திக் கொண்டிருந்தார். காந்தி கோபமடைந்தார் அப்போது மற்றM.P.கள் என்னைச்சுட்டிக் காட்டி அதோ ஒரு பொறுமைக்குன்று இருக்கிறது. (movement of Patonice) அவர் வந்து ஒரு மாதமாகிறது நீ வந்து ஒரு வாரம். நீ இவ்வளவு கோபம் அடைகிறாய்" என்றார்கள். "Look there sitting a movement of Pahonee It is one month after he came here" என்றார்கள் நான் உடனே "ஏது MP கள் என்னை மண்டகப்படி செய்கிறதாக தோன்றுகிறது என்றேன். I think thattheMP are creacking jokes at my cosh)உடனேஅந்தMPகள் எனக்கு சமாதானம் சொன்னதோடுசெல்வராஜைஉடனேஎன்வேலையை முடித்து விடும்படி சொன்னார்கள் அதுபோல்ஒருநாள் ரெங்கனாதனை பார்த்து வருஷம் ஒன்றுக்கு ரூ. 10000 - என்பதை ரூ 3000 கொடுப்பது என்றுமுடிவு செய்யப்பட்டது M.L.M.வேலையில் இருக்கும் போது முதலில் சென்னை பாரகன் தியேட்டரை வாங்கியது பின்பு மஹாலிங்க புரம் என்ற ஊரை உருவாக்கி யது தூத்துக்குடியில் மீளவிட்டான் இடங்களை பலருக்கு விற்றது எல்லாம் என்னுடைய யோசனை தான் - அவர் மதுரையில் மில்வாங்கநினைத்தபோதுஎனக்கும்M.L.M.க்கும். கருத்து வேறுபாடு ஏற்பட்டதை அடுத்து நானே தன்னிச்சை யாக விலகிக்கொண்டேன்.நான்விலகிக்கொண்டபின் M.L.M அந்த மில்லினால் ரெம்ப தொந்திரவு அடைந்து உடல் நல மில்லாமல் போயிற்று அதனால்அவரை நான்பார்க்கப் போன போது M..L.M. என்னைப்பார்த்து "வெ. நீங்கள் இருந்த போது நான் பணக்காரன். இன்று நான் கடன்காரன் என்று

சொல்லி வருத்தப்பட்டார். நான் சமாதானம் சொல்லிவந்தேன் பின் ஒரு மாதத்தில் அவர் காலமாகிவிட்டார்.

முதலாளி ராம. 26—1—1958ல் காலமானார்கள். ராஜாசர் முத்தையா செட்டியார் அவர்கள் சகலை-முதலாளி காலம் வரை அவர்கள் தொடர்பு கிடையாது. அதற்குப் பின் அவர்கள் தொடர்பு ஏற்பட்டது. அவர்கள் சொல்லியபடி சிலகாலம் M. L. M. வேலையையும் முதலாளி வீட்டு வேலையை கவனித்து வந்தேன் அது சமயம் தான் மாப்பிள்ளை மு.வுக்கு இந்தியன் பாங்கில் ராஜாசர் வேலை கொடுக்கச் செய்தார்கள் இந்த உதவி மறக்கற்பாலதன்று முதலாளிவீட்டு சம்மந்தமாக இன்ஷூரன்ஸ் பாலிஸிகளுக்கு பணம் வாங்கவேண்டியபொறுப்பை என்னிடம் தந்திருந்தார்கள். அதற்கு டாக்டர் சர்ட்டிபிகேட்டு வாங்க வேண்டியிருந்தது முதலாளி இறந்த போது முதல் உதவி பார்த்தது செக்காலை டாக்டர் சுப்பிரமணியம் இன்ஷியூரன்ஸ் தொகை ரூ 100/க்கு ரூ. 2 வீதம் அவர் கேட்டார். மொத்தம் இன்ஷியூரன்ஸ் தொகை 12லெக்ஷம்-அவருக்கு fees 240 0/ வரும் வேறு பள்ளத்தூர் முத்தையா டாக்டரிடம் (ராஜாவுக்கு வேண்டியவர்) வாங்க நினைத்தோம் - அவர்தான் தந்தால் டாக்டர் சுப்ரமணியம் இன்ஷியூரன்ஸ் கம்பெனிக்கு எழுதி இடைஞ்சல் செய்வார் என்றார் - அதனால் அந்த யோசனை கைவிடப்பட்டது-என் தமயனார் AV. தியாகராஜாL.I.C.யில் இருந்தார்கள் அவர்கள் யோசனைப்படி Madras Bombay Calcutta மூன்று இடங்களிலும் உள்ள பாலிஸிகளில் ஒவ்வொன்றை மட்டும் எடுத்து அவைகளுக்கு மட்டும் டாக்டர் Certificate அனுப்பிவிட்டு மற்ற கம்பெனிகளுக்கு அதை refer பண்ணி கேட்டுக்கொள்ளும்படி செய்யலாம்என்றார்கள் அதுபோல் மூன்று பாலிஸிகள் எடுத்து அதற்குள்ள fees ரூ. 2000/ மட்டும் சுப்பிரமணியத்துக்கு கொடுத்து சர்டிபிகேட்டு வாங்கி கம்பெனிகளுக்கு அனுப்பினேன். இதனால் ரூ. 22000/ முதலாளி வீட்டிற்கு மிச்சம் இதற்காக ராஜாசர் என்னைப்

பாராட்டினார்கள் நான் M.L.M.ஐ விட்டுவிலகி இரண்டொரு மாதம் கள்ளிக்கோட்டை சோம. சம்பந்தம் அறந்தாங்கியிலும் காளையார் கோவிலிலும் வேலை பார்த்தேன் அறந்தாங்கியில் அஸ்த்திவாரம் போட்டது நான் தான் மேற்படி சோம.வுக்கும் எனக்கும் கருத்து வேறுபாடு காரணமாக நான் விலகிக்கொண்டு மாயவரம் போய் மேலமட வளாகத்தில் வட்டிக்கடை என் மனைவி பெயரில் வைத்தேன் (1966ல்) சாரதாள் கல்யாணம் 7—11—60லும் சகுந்தலா கல்யாணம் 3—6—65லும் நடைபெற்றன - நான்முதலாளி வீட்டில் வேலை பார்த்சதில் எனக்கு பெருத்த வருவாய் எதுவும் இல்லை ஆனால் எனது வார்த்தைக்கு அதிகமதிப்பு கொடுப்பார்கள் எனது சிபார்சின் பேரில் பிச.சுப. மெய்யப்பனுக்கு இந்தியன் பாங்கிலும், இந்தியன் ஓவர்சீஸ் பாங்கில் தம்பி சின்ன மெய்யப்பனுக்கும், என் மகன் செந்தில்நாதனுக்கும் பரோடாபாங்கில் பிச, பழ. மெய்யப்பனுக்கும் இன்னும் பலருக்கும் வேலைவாங்கித் தந்தார்கள். தவிர எனது அண்ணன் மகன் பவானி அடைக்கப்பனுக்கு 1942ல் ரூ 42600/-கடன் கொடுத்து அவன் சொத்துக்களை மீட்க உதவினார்கள்.

நான் பிறர்பொருளுக்கு ஆசைப்பட்டதில்லை என்னை நன்றாக புரிந்துகொண்டவர் முதலாளி ராம. தான் காரணம் சில நிகழ்ச்சிகள். சண்டைக் காலத்தில் (1943—45) முதலாளியின் ரெங்கோன் கடைக்கு ஏஜண்டாக இருந்தவர் எனக்கு மேலாளராக இருந்த புதுப்பட்டி சொக்கலிங்கம் செட்டியார். அந்த சமயம் வெளிநாடுகளில் இருந்தவர்கள் எல்லாரும் "நாம் இனி இந்தியா திரும்பப்போவதில்லை" என்று நினைத்து அவரவர் நோக்கப்படி பல காரியங்களை செய்திருக்கிறார்கள். அம்மாதிரி சொ. வும் செய்திருக்கிறார்' என்று அவர் பெயரில் (ரூ. 60000/வரை)ஒரு குற்றச்சட்டை என்னிடம் முதலாளி சொன்னார்கள். அதை நான் நம்ப முடியாது என்றேன். இந்த குற்றச்சாட்டை மு சித.மு.

ஏஜண்டு ஆ. தெக்கூர் நாச்சியப்ப செட்டியார் சொன்னார் என்றார்கள். வெளிநாடுகளில் நடக்கும் உண்மையை இங்கிருந்து நாம் கண்டுபிடிக்க முடியாது நான் சொன்னதையே வைத்து எனை பொய்யனாக்கி விடமுடியும் என்றேன் அது எப்படி என்றார்கள் நான் சொன்னேன் வெளிநாட்டில் நாங்கள் எவ்வளவு நெருக்கமான நண்பாடத்திலும் தொழில் சம்மந்தம் உண்மையை சொல்ல மாட்டோம் ஒரு இனத்தைக் குறிப்பிட்டு நீங்கள் என்ன வட்டிக்கு கொடுக்கறீர்கள் என்றும்கேட்டால்நாம்கொடுப்பது ரூ 1-10 ஆக இருந்தாலும் ரூ 1-20க்கு கொடுப்பதாக சொல்வோம் அவர் அந்த ஆசாமியிடம் 1-15க்கு கடன் தருவதாக சொல்வார் அவன் நம்மிடம் 1-10க்கு இருக்கும் போது அவரிடம் போகமாட்டான். அந்த நண்பர் ஊர் வந்த சமயம் நீங்கள் ஊர் நடப்பு விசாரிக்கும் போது அவர் இந்த இனத்தை குறிப்பிட்டு ரூ 1-20க்கு நாம் கொடுப்பதாக சொல்வார் குறிப்பு நகரில் ரூ 1-10 தான் வட்டி வரவாகும் நான் ஊர் வந்த பின்பு அந்த நண்பரைக் கூப்பிட்டால் அவர் என்னிடம்ரூ 1-20 சொன்னீர்களே என்பார் நான்சொன்னது உண்மை கடை நன்மையைப் பொறுத்து நான் சொன்ன பொய்யை எனக்கு எதிராக திருப்பலாமா இம்மாதிரி நிகழ்ச்சி களில் நீங்கள் இங்கு இருந்து கொண்டு எப்படிஉண்மையைக் கண்டு பிடிக்க முடியும் என்றேன் முதலாளி சிரித்துக் கொண்டு நீங்கள் Clener சாமர்த்தியமாக பேசுகிறீர்கள் என்றார்கள்.

இன்னொரு நிகழ்ச்சி முதலாளிபேரில் அவர்கள்பெரிய தகப்பனார் பேரன் சாத்தப்பன் போட்ட வழக்கில் வக்கீல் கோபாலய்யர் சொல்லவேண்டிய சாக்ஷியத்தை ஒரு பேப்பரில் எழுதி அவரிடம் கையெழுத்து வாங்கி வைத்திருந் தோம் அதற்கு (Pricis) பிரிசிஸ் என்று பெயர். அதுவும் மற்ற கேஸ் சர்பந்தமான பேப்பர்களும் ஒரு பெட்டியில் வைத்து பூட்டி அதன் சாவி என்னிடமும் முதலாளியிடமும் தான்

இருந்தது. ஒரு நாள் நான் தேவகோட்டை வந்து திரும்பிப் போனவுடன் Pricis பெட்டியில் காணவில்லை. முதலாளி என்னைப்பார்த்து "பெட்டிச்சாவி உங்களிடமும் என்னிடமும் தான் இருக்கிறது. Pricis காணவில்லை என்றால் என்ன அர்த்தம்" என்றார் எனக்கு கடுங்கோபம் வந்துவிட்டது. "என் பேரில் dishonerty impeach பண்ணினால் உங்கள் வேலை எனக்குத் தேவை இல்லை. இப்போதே விலகிக் கொள்கிறேன்" என்றேன். என் கோபத்தைப் பார்த்து பேச்சு முற்றிவிடும் என்று நினைத்து முதலாளி தமக்கை புருஷன் சொதீ. சொ. மு. அவர்கள் என்னை சமாதானப்படுத்தி வெளியில் கூட்டிச் சென்று விட்டார்கள். இது நடந்தது இரவு 7மணி. மறுநாள் இதைப்பற்றி பேச்சு எழவில்லை. சில மாதங்கள் சென்ற பின் மேற்படி Pricis இருக்கிறது என்று முதலாளி சொன்னார்கள் அது அவர்களுடைய Godrej பீரோவில் இருந்து திருமலை ஐயங்கார் எடுத்ததாக சொன்னார்கள்.

இதே போன்று மௌபீரிஸ் ரோட்டில் உள்ள வெங்கடேச ஐயங்கார் வீட்டை நாங்கள் ஏலத்தில் எடுத்ததற்கு அசைனி தந்த சர்ட்டிபிகேட்டை வக்கீல்கிளார்க் ரமணி என்னிடம் தந்ததாக சொன்னாராம். நான் அவர் தரவில்லை என்று சொல்லிவிட்டேன். பின்பு சில தினங்கள் சென்று முதலாளியின் பீரோவில் இருந்து எடுத்தேன். இது தவிர முதலாளி மாப்பிள்ளை சொ. விடம் கடியாபட்டி மரக்கடை நாராயண செட்டியார் என்னைப்பற்றி "வெ. ரெம்ப கெட்டிக்காரர். அவர் போகிற வழி கண்டுபிடிக்க யாராலும் முடியாது உங்கள் அம்மான் அவரை ரெம்ப நம்புகிறார்கள். அவர் பார்க்கிற வேலையை நீங்கள் பார்க்கலாமே" என்று சொன்னாராம். மாப்பிள்ளை சொ. முதலாளியிடம் கேட்ட போது "வெ. வை நாம் கிட்டத்தில் வைத்தும் எட்டத்தில் வைத்தும் வேலை வாங்கியிருக்கிறோம். அவரைப் பற்றி நமக்குத் தெரியுமா? பிறர்க்குத் தெரியுமா?" என்றார்களாம். இதை சொ. முதலாளி இறந்த பின் என்னிடம் சொன்னார்.

1945, 1950, 1967ல் வயிரவர்பட்டி கோயில் காரியத்தனம் பார்த்தேன். மாசி மாதம் மகம் நட்சத்திரத்தில் சிவன்கோவில் சம்பந்தமாக நகரப்பள்ளிக் கூடத்தில் நடந்த பூசைக்கு நான் வேல் எடுத்துச் சென்றேன். வெகுகாலமாக எங்களில் யாரும் வேல் எடுத்ததாகக் கேள்விப் படவில்லை இந்த பாக்கியம் எனக்கு அளித்த முருகக்கடவுளை நான் எப்போதும் வணங்கிக் கொண்டிருக்கிறேன். நான் மாயவரத்தில் 1966ல் வட்டிக்கடை நடத்தி வரும்போது ஸ்ரீ அபயாம்பிகைக்கு ஒரு பவுன் எடையில் திருமங்கிலியம் சாத்தினேன். அது தினசரி அம்மன் கழுத்தில் இருக்கவேண்டும் என்பது என் ஆசை. அதற்கு நகை வகையறா கவனிக்கும் மணியம் ஒத்துக்கொள்ளவில்லை நாம் சாத்தியவுடன் அதை எடுத்து ஏற்கனவே உள்ள கோர்வையில் சேர்த்து விடுவது தான் வழக்கம் என்றார். அதற்கு அவர் சொன்ன காரணம் திருட்டு போய்விட்டால் அவரும் மற்றவர்களும் பொறுப்பாக நேரிடும் என்றார். நான் மானேஜர் சட்டநாத பிள்ளையைப் பார்த்து எனது விருப்பத்தை சொன்னேன் திருமாங்கல்யம். திருட்டுப் போகாமல் வெள்ளிக் கம்பியில் சேர்த்து முறுக்கி விடும்படி சொன்னார். அதுபோல் கனமான வெள்ளிக்கம்பி செய்து கொடுத்தேன். அத்துடன் திருமங்கல்யத்தை கோர்த்து முறுக்கி விட்டார்கள். அந்த திருமங்கல்யம் இன்றும் அம்மன் கழுத்தில் இருக்கிறது. இதை ஏற்றுக்கொள்ள அபயாம்பிகை காட்டிய கருணையும் சட்டநாதபிள்ளை செய்த உதவியும் மறக்க முடியாதவை. இதுதவிர ஒவ்வொரு வருஷமும் ஆடிமாதம் முதல் வெள்ளிக்கிழமையில் ஸ்ரீ அபயாம்பிகைக்கு சந்தனக்காப்பு செய்துவருகிறோம் நாங்கள் தேவகோட்டை வந்த பின்பு அந்த சந்தனக்காப்பை செய்ய எங்களுக்காக S.S. அருணாசலம்என்பவர்கள் எங்கள் செலவில் சுந்தரேச குருக்கள் மூலம் செய்து விபூதி பிரசாதம் அனுப்பி வருகிறார்கள். 1965ல் மாயவரம் போய் 1978ல் தேவகோட்டை வந்தோம் 1975ல் கடன் நிவாரண சட்டம் தொழிலை பாதித்துவிட்டது. 7-11-1966ல்சஷ்டிஅப்தபூர்த்தி

சாந்தியும் 25-10-1987ல்சதாபிஷேகமும் வயிரவம்பட்டியில் செய்து கொண்டோம்

எனக்கு இறையுணர்வை ஏற்படுத்தியது கோட்டூர் நைனார் எனக்கு 6 வயது இருக்கும் மாலை மேணியிருக்கும் எங்கள் வீட்டில் நடுவாசல் மண்ணில் பாடம் படித்துக் கொண்டிருந்தேன். ஒரு தேள் கொட்டிவிட்டது அதற்கு சிகிச்சை செய்தார்கள். அப்போது எல்லாரும் நைனார் பெயரைச்சொன்னார்கள்.குணம்ஏற்பட்டது. அன்றிலிருந்து நானும் நைனாரை வணங்கி வருகிறேன். இன்னொரு தெய்வம் காரைக்குடி செம்மராங்காளி. என் தாயைப் பெற்ற பாட்டனாருக்கு முதல் தாரம் மெய்யம்மை ஏதோ சண்டையால் தற்கொலை செய்து கொண்டாள். அவள் ஆவியைக் காரைக்குடி செம்மராங் காளியுடன் சேர்த்து வைத்தார்களாம். அந்த மெய்யம்மை ஆச்சிக்கு எங்கள் பாட்டியார் வீட்டில் இன்றும் படைத்து வருகிறார்கள். எங்கள் தாயைப் பெற்ற பாட்டி சிவகாமி ஆச்சி பாட்டனாருக்கு இரண்டாந் தாரம். எனது சிறுவயதில் நடந்த இன்னொரு நிகழ்ச்சி எனக்கு 4 வயது. என் தமையனார் தியாகராஜாவுக்கு 8 வயது சேஷய்யங்கார் என்பவரது திண்ணைப் பள்ளிக் கூடத்தில் படித்துக் கொண்டிருந்தவர்கள் நானும் பள்ளிக் கூடத்திற்கு அவர்களுடன் சென்றிருந்தேன். எனக்கு காலில் வெள்ளித் தண்டையும் காதில் தோடும் போட்டிருந்தார்கள். மதியம் 2 மணியிருக்கும். ஒருவன் என்னிடம் உன் தாயார் குண்டு ஊரணியில் குளிக்கிறார்கள். உன்னைக்கூட்டிவரச் சொன்னார்கள் என்றான். உடனே நான் அவனுடன் போக ஆரம்பித்தேன். அவன் என்னைத் தோளில் தூக்கிவைத்துக் கொண்டான். தாயைப் பார்க்க மகிழ்ச்சி. என் அண்ணன் சந்தேகப்பட்டு என் பின்னாலே வந்தார்கள். எனக்கு பல ஜாடைகள் காட்டியும் நான் புரிந்து கொள்ளவில்லை. அவன் குண்டுக் கரையைத் தாண்டினவுடன் அண்ணன் கேட்டதற்கு கண்மாயில் குளிக்கிறார்கள் என்றான். அவனைத்

தட்டிக் கேட்க அண்ணனுக்குத் தைரியமில்லை. கண்மாய்ப் பக்கம் போன போது அங்கு யூனியன் ஆபீஸ் குறவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். அண்ணனுக்குத் தைரியம் வந்துவிட்டது. என்னைத் தூக்கிப் போனவனிடம் நீ கீழே இறக்கிவிடாவிட்டால் குறவர்களிடம் சொல்வேன் என்றார்கள். அவன் உடனே என்னை இறக்கி விட்டு விட்டான். என்னை வீட்டுக்கு கூட்டி வந்து விஷயம் சொன்னவுடன் எனது கால் தண்டை முதலியவைகளை எள் தாயார் கழற்றி விட்டார்கள். அன்று என் அண்ணன் இருந்திராவிட்டால் என் நிலை என்னாகி இருக்கும். இறைவனுக்கே தெரியும். இந்தக் கதையை என் தாயார் அவர்கள் பேரன் பேத்திகளுக்குச்சோறு சாப்பிடும் போது சொல்வது வழக்கம்.

மெ லெ. மெ. விடம் வேலை பார்த்த போது தான் சென்னையில் பாரகன் தியேட்டர் வாங்கியது. அந்த தியேட்டர் ஆரம்பத்தில் டாக்டர் அழகப்ப செட்டியார் வாங்கிய போது பாரகன் டாக்கீஸ் என்ற ஒரு கம்பெனியை ஏற்படுத்தி அந்த கம்பெனி பேரில் பாரகன் தியேட்டரை வாங்கியிருந்தார்கள். ஆனதால் கம்பெனி ஷேர்களை நாங்கள் வாங்கியதே போதுமானதாயிருந்தது. அந்த தியேட்டர் இருக்கும் இடம் ஒரு டிரஸ்டுக்கு சொந்தம். அதை டாக்டர் அழகப்பசெட்டியாரிடமிருந்து நர்சு என்பவர் வாங்கியிருந்தார். நர்சுவிடமிருந்து நாங்கள் வாங்கினோம். நர்சு ஒப்பந்தப்படி லீஸ் முடிந்தவுடன் இடத்தையும் கட்டிடத்தையும் டிரஸ்டிடம் ஒப்புவித்துவிட வேண்டும். நாங்கள் 5½ லெட்சத்துக்கு வாங்கினோம். நாங்கள் வாங்கும்போது லீஸ் பீரியட் இன்னும் 10 வருஷம் பாக்கியிருந்தது. அதற்குள் 5½ லெக்ஷத்தையும் வட்டியையும் நாம் சம்பாதித்து விடலாம் என்ற நம்பிக்கையில் வாங்கினோம். அந்த தியேட்டர் இன்றும் M.L.M. குடும்பத்தாரிடம் இருந்து வருகிறது. மகாலிங்கபுர இடம் 500 கிரவுண்டு உள்ளது பனை மரங்கள் உள்ள காடு இதை C.I.T. எடுத்துக் கொள்ளப் போவது

அதைச் சேர்ந்த ஒரு சர்வேயர் சொன்னார் அன்று M.L.M. சென்னையில் இல்லை நான் M.L.M. வேலையும் S.RM.AR. வேலையும் சென்னையில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த தால் ராஜாசர் முத்தையா செட்டியார் அவர்கள் தொடர்பு இருந்தது அவர்கள் சிபார்சின் பேரில் C.I.T. தலைவர் ஞான வொளிவு மகாலிங்கபுர இடத்தை எடுக்காமல் இருக்க ஒத்துக் கொண்டார் உடனே நாங்களே அந்தஇடத்டை பலபிளாட்டு களாக பிரித்து கிரவுண்டு 2400 சதுர அடி ரூ 3750 வீதம் விற்றோம் பிளாட் போடுவதில் நாராயணசாமி ஐயர் என்ற ஒரு வருடைய உதவி முதலில் எங்களுக்கு இருந்தது. இந்த விஷயத்தில் ராஜாசர் அவர்கள் தலைபாட்டிரா விட்டால் அந்த இடத்தை C.I.T. எடுத்துக் கொண்டிருக்கும் குறைந்த காம்பன் சேஷன் கிடைத்திருக்கும் இதில் ராஜாசர் செய்த உதவி மறக்க முடியாதது.

மகாத்மா காந்தியடிகளைப் பற்றி ஒரு ஞாபகம் காந்தி அடிகளை சிறையில் இருக்கும் போது குடல் வால்வு ஆப்பரேஷனுக்காக ஜுஹு என்ற இடத்திலுள்ள விக்டர் சாசூன் ஆஸ்பத்திரியில் ஆங்கில அரசாங்கம் சேர்த்திருந்தது வருஷம் 1923-1924 ஆக இருக்கலாம். நிலைமை கவலைக் கிடமாக இருந்ததால் அவரைப் பார்க்கும்படி ரைட் ஆனரபில் சீனிவாசசாஸ்திரியை அனுப்பியிருந்தார்கள் அவர் தேசத்துக்கு என்ன செய்தி சொல்லுகிறீர்கள் என்று காந்தி அடிகளைக் கேட்டார் அதற்குக் காந்தி அடிகள் தேசத்துக்கு ஒன்றும் சொல்லக் கூடாது என்பதற்காகத்தானே என்னைச் சிறையில் வைத்திருக்கிறார்கள் ஆனதால் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை "என்று சொல்லிவிட்டார்" இது பத்திரிக் கைச் செய்தி காந்தி அடிகளின் ஜாதகம் திரு வீ கல்யாண சுந்தர முதலியார் நடத்தி வந்த நவசக்தி பத்திரிக்கையில் வெளிவந்ததுநான் காந்தியடிகள் பிழைப்பாராஎன்று தெரிந்து கொள்ள ஆர்வப்பட்டேன் ஆனதால் அதை ஒரு கடுதாசியில் குறித்துக் கொண்டு எனது நண்பர் கர்நாடகமாகாணத்தைச் சேர்ந்த மூல்க்கிமா வட்டலெட்சுமிநாராயணசர்மாவைப்பார்த்

தேன் சர்மா மிக அழகும் இளமையும் கொண்டவர் அவர் சி க.மு. ராமசாமி செட்டியார் வீட்டில் தங்கியிருந்தார் அவர் சத்திரம் சோம போன்ற பெரிய பணக்காரர் வீட்டிற்குத்தான் போவார் ஜாதகம் பார்ப்பதற்காக உடனே பணம் கேட்கமாட்டார் அவர் சிலமாதங்கள் சென்று ஊருக்குப் போகும் போது பலரும் 100, 200 என்று பணம் கொடுப்பார்கள். அவருக்கு காந்தி அடிகளைப் பிடிக்காது காரணம் ஜாதியில் உயர்வு தாழ்வு கிடையாது என்று காந்தி அடிகள் சொல்லியது தான். அதனால் தான் ஜாதகத்தை ஒரு காகிதத்தில் நான் தனியாகக் குறித்துப் போனேன்.அவர் ஜாதகத்தைப் பார்த்து இவர் யார் என்று கேட்டார். அவர் எனக்கு எட்டிய சொந்தம் என்றேன். எங்கு இருக்கிறார் என்று கேட்டார். உலகம்பட்டி என்றேன். என்ன செய்து கொண்டிருக்கிறார் என்று கேட்டார். குடும்பத்தை விட்டு சாமியார் மாதிரி இருக்கிறார் என்றேன். என்ன பார்க்க வேணும் என்றார். உடல் நிலை சரியில்லை. அவர் பிழைப்பாரா என்று தெரியவேண்டும் என்றேன் அவர் ஜாதகத்தைப் பார்த்துவிட்டு இவருக்குக் குடல்நோய் கத்திபட்டு ஆறும் இப்போது பிழைத்துக் கொள்வார். இவருடைய 74வது வயதில் ஒரு கண்டம் இருக்கிறது. அப்போதுதான் மேலும் பார்க்க வேண்டும். ஜாதகம் புண்ணியம் மிகுந்த ஜாதகம் அதற்கு மேலும் வயது வளரலாம் என்று சொல்லிவிட்டு இவர் யார் என்று மறுபடியும் கேட்டார். நான் ஏற்கனவே சொல்லிவிட்டேனே என்றேன். அல்ல இந்த மனிதனை எனக்குத் தெரிந்திருக்க வேண்டும்என்றார் ஊரில் இருப்பவர் களைஎல்லாம் உங்களுக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும் என்றேன். அல்ல ஜார்ஜ் சக்கிரவர்த்தியை எனக்குத் தெரியுமல்லவா அதுபோல் இவரையும் எனக்குத் தெரிந்திருக்கவேண்டும் என்றார். நான் காந்தி அடிகள் பெயரைச் சொன்னவுடன் அவர் அதிர்ந்து போனார். அது முதல் அவர்

காந்தியைப் பற்றி விமர்சிக்கவில்லை. புண்ணியம் மிகுந்த ஒருவரைப்பற்றி நாம் குறை பேசினால் நமக்குப் பாவம்வரும் என்றார். தீபாவளிக்கு அவருக்கு பணக்காரர்கள் கெண்டைத் துப்பட்டா வாங்கிக் கொடுப்பது வழக்கம். நான் அவருக்குக் கதர் வேஷ்டியும் துண்டும் வாங்கிக் கொடுத்தேன். தீபாவளி அன்று அவர் அதைக் கட்டியிருந் தார்.

பிரெஞ்சுக்காரர்கள் மிக நல்லவர்கள் பெருமையில்லா தவர்கள் யாருடனும் சுமூகமாக பழகுவார்கள். ஐகோர்ட் ஜட்ஜ் லெட்டர் போட போஸ்ட் ஆபிஸுக்கு வருவார். நம்மை கண்டால் சௌக்கியமா? என்று கேட்டு கைகுலுக்கு வார். அதற்காக நமது வழக்கு அவரிடம் வந்தால் நேர்மை யாகத்தான் தீர்ப்பு சொல்வார். உதாரணமாக மொத்தேதே நர்போன் (Motais de Narbon) என்பவர் எனக்கு தெரிந்த ஐகோர்ட் ஜட்ஜ். அவரிடம் ஒரு வழக்கு வந்தது. வாதி ஒரு ஊழியர். பிரதிவாதி அவருடைய முதலாளி. ஊழியர் தன்னை மூன்றுவருடத்துக்கு மத்தியில் விலகி விட்டதால் மூன் றுவருட சம்பளம் தனக்கு தரவேண்டும் என்று முதலாளி பேரில் போட்ட அந்தவழக்கு மேற்கண்ட ஐகோர்ட்ஜட்ஜிடம்வந்தது முதலாளி ஐகோர்ட் ஜட்ஜ் நண்பர் அதனால் வழக்கு என்ன ஆகுமோ? என்று ஊழியர் பயந்து கொண்டிருந்தார். ஆனால் ஐகோர்ட் ஜட்ஜ் ஊழியருக்கு சாதகமாக தீர்ப்பு சொல்லி அதன்படி ஊழியருக்கு பணம் கொடுக்கும்படி முதலாளி வீட்டுக்கு வந்து அறிவுரை சொல்லி போனார். அப்போது நான் கூட இருந்தேன்.

இது போல் அரசாங்க அதிகாரிகளும் நேர்மையான வர்கள் என்பதற்கு இன்னொரு உதாரணம். வாலேத் (Valate) என்பவர் என்னுடைய நண்பர். அவருடன் எனக்கு 1935, 1938 வருடங்களில் சிலகாரியங்கள் விஷயமாகப்பேச நேர்ந்தது, அப்போது அவர் "பொது ஜனங்களுக்கு சட்டம் தெரியாது. நாங்கள் சட்டப்படி அவர்களுக்கு எவ்வளவு

அனுகூலம் செய்ய முடியுமோ அதைச் செய்வது எங்கள் கடமை அவர்கள் ஏமாற்றி அதிகப் பணம் வசூலித்து அரசாங்க கஜனாவை நிரப்புவது எங்கள் கடமை அல்ல'' என்று சொன்னார்.

சண்டைக்காலத்தில் செய்கோனுக்கு வரும் கடிதங்கள் எல்லாம் (Censor)செய்துதான் வரும். அதாவது அரசாங்கம் லெட்டர்களை உடைத்துப் பார்த்து ஒட்டித் தருவார்கள். தவிர செய்கோனிலிருந்து வேறு நாடுகளுக்குப் பணம் அனுப்ப முடியாது காரணம் செலாவனி க்கட்டுப்பாடு இருந்தது அதனால் நர் இந்தியர்களுக்கு இந்தியாவில் செலவிற்குப்பணம் இல்லாமல்சிரமம்ஏற்பட்டது. நமது சங்கம் மூலம் (செய்கோன்) இந்தியத் தூதரகம் (Consul) வாயிலாக முயற்சி செய்து இந்தியாவிற்குப் புறப்படும் ஒவ்வொரு இந்தியருக்கும் வழி செலவிற்கு ரூ200/-க்கு ரிசர்வ் பாங்க் டிராப்ட் கிடைக்கும் படி ஏற்பாடு செய்தோம். இது விஷயமாகவும் செய்கோன் அரசாங்கம் நமது நிலங்களை எடுத்துக் கொள்வது விஷயமாகவும் நானும், நாடிமுத்து பிள்ளையும், கூத்தாநல்லூர் அஜுசும், சென்னை முதல் ஓ. பி. இராமசாமி ரெட்டியாரையும், சக மந்திரி டி. எஸ் எஸ் ராஜனையும், சந்தித்தோம். அவர்கள் இந்த விஷயங்கள் மத்திய அரசாங்கம் கையில் இருப்பதாகவும்: இது விஷயமாக ஏற்கனவே மத்திய அரசாங்கத்தை தொடர்பு கொண்டதாகவும், நேரு அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை என்றும், சொன்னார்கள்.

தினந்தோறும் வழிபடும் தெய்வங்கள்

1. ''அகஸ்த்தீஸ்வரர் என்ற நயினார்'' என்ற பாட்டு (நான் சிறு பிள்ளையாக இருக்கும் போது தேள் கொட்டிவிட்டது. அப்போது எல்லாரும் நயினாரை பிராத்தித்தார்கள் அது முதல் நானும் பிராத்திக் கின்றேன்)

2. "செம்மராங்காளி என்ற தெய்வம்" என்ற பாட்டு (எங்கள் பாட்டியார் மெய்யம்மை ஆச்சியைகாரைக்குடி-செம்மராங்களியுடன் சேர்ந்திருப்பதாகச் சொல்வார்கள்)

3. "மாயவரத்து அபயாம்பிகை" என்ற பாட்டு (ஒரு பவுன் எடையில் நான் அளித்த திருமாங்கல்யம் இன்றும் ஸ்ரீ அபயாம்பிகை கழுத்தில் இருக்கிறது.)

4. "மாயவரத்து அபயாம்பிகை, மற்றும் துர்க்காதேவியுடன் என்ற பாட்டு,
(நானும் என் மனைவியும் கோவிலுக்குள் சென்றபோது விளக்கு எல்லாம் அணைந்துவிட்டது. ஒரே இருட்டு, கோவிலுக்குள் யாருமில்லை. அப்போது இரண்டு பெண்கள் மட்டும் எங்கள் கையை பிடித்து அழைத்து வழி காட்டினார்கள்.)

5. "ஆடி வெள்ளி முதற்கிழமை சந்தனக் காப்பு" என்ற பாட்டு,
(ஸ்ரீ அபயாம்பிகைக்கு ஒவ்வொரு ஆடி முதல் வெள்ளிக் கிழமைகளில் சந்தனக்காப்பு செய்து வருகிறோம்.)

6. "பாகம் பிரியாள் என்ற தெய்வம்" என்ற பாட்டு (பாகம்பிரியாள் கோவிலில் எல்லா தெய்வங்களுக்கும், ஒவ்வொரு தமிழ் வருட முதல் தேதியில் அபிஷேகம் செய்து வருகிறோம்.)

அகஸ்த்தீஸ்வரர் என்ற நயினார்
அடியேனுக்குச் சிறுவயதில்
ஆன்ற இறை உணர்வை அளித்தாரே
அவரை நான் அல்லும் பகலும் போற்றுகிறேன்.

செம்மராங்காளி என்ற தெய்வம்
சிறியேனைக் காத்து நிற்க (அவளுடன்)
சேர்ந்த மெய்யம்மைப் பாட்டியையும்
இரவும் பகலும் போற்றுகிறேன்

மாயவரத்து அபயாம்பிகை
மாங்கல்யம் அணிந்து கொண்டு
ஆன்ற புண்ணியத்தை அருளியதால்
அல்லும் பகலும் போற்றுகிறேன்.

பாகம் பிரியாள் என்ற தெய்வம்
பரிவுடன் எனது காணிக்கையை
ஏற்றுக்கொண்ட கருணையினால்
இரவும் பகலும் போற்றுகிறேன்.

மாயவரத்து அபயாம்பிகை
மற்றும் துர்க்காதேவியுடன்
விபவ கார்த்திகை இருபத்துமூன்றில்
எங்கள் கையைப் பிடித்தழைத்து
இருளில் வழிகாட்டி அருளியதால்
எமக்கு கிடைத்த பாக்கியத்தை
என்றும் நாங்கள் மறவாமல்
இரவும் பகலும் துதிக்கின்றோம்.

அண்ணாமலையார் அவர்துணையை(கடிதங்களில்)
அந்தக்காலத்திலிருந்தே போடச் சொல்லி
அறிவுறுத்தியபடி நான் செய்கின்றேன்
அதனால் முக்தி எனக்களிப்பார் அதுஉறுதி

சமயபுரத்து மாரியம்மன் என்மனைக்குக்
கனவில் வைரக் காப்பு அணிந்து வந்தாள்
அவள் கோயிலில் காட்சி தந்தாள்
எனது நோயை தீர்க்கவேண்டி
இரவும் பகலும் போற்றுகிறேன்

சைதாப்பேட்டை கடும்பாடி அம்மன்
சாரதா கணவர் நோயைத் தீர்த்த
அருமையை வியந்து பாராட்டி
அல்லும் பகலும் போற்றுகிறேன்.

வேளாங்கண்ணி மேரி அம்மை
எங்களின் வினைகளைத் தீர்த்தருளி
வேண்டும் வரங்கள் ஈவாள் என்று
இரவும் பகலும் போற்றுகிறேன்

இயேசு கிறிஸ்த்து இறைவன் மகன்
எமது பாவத்தை ஏற்றுக் கொண்டு
ஈசன் பாதம் அழைத்துச்செல்ல
இரவும் பகலும் வேண்டுகின்றேன்

எமதர்மராஜன் நீதிமான்
என்றன் பாவத்தை மன்னித்து
ஈசன் பாதம் சேர்க்கச் சொல்லி
இரவும் பகலும் போற்றுகிறேன்.

பிரம்மன்

எனக்கு நற்பிறவி அளித்த பிரமனே
இனியும் பிறவி அளிக்க நினையாமல்,
மன்றுளாடியின் மலர்ப்பாதம் சேர்த்திடுவீர்
என்றும் மறவாது உமை வணங்குவன் யான்

காமன்

காமனே கருணை செய்வாய்
கனவினும் நனவினும் எனை வருத்தாதீர்
நான் உமை வணங்குகின்றேன்
நான் பார்வதி பரமன்தாள்பற்றியது அறியாயோ

எமதர்மராஜன்

பேயான மனத்தினால் நான் செய்தபாவங்கள்
நானாகச் செய்ததல்ல கருணைகூர் எமதர்மராஜனே
சேயான என்பிழைகள் பொறுத்தருள வேண்டும்
(கருணை வள்ளலே)
இனிமேல் நான் ஏதும் பாவங்கள் செய்யாமல்
தடுத்தருள வேண்டும் ஐயனே

துர்க்கை

மாயவரத்துத் துர்க்கை அம்மன்
மகிழ்வாய்த் தாலியை அணிந்து கொண்ட
மாபெரும் கருணையை நினைந்துருகி
அனு தினமும் வணங்குகின்றேன்.

பாடியம் பதியில் வாழும் வலிதாய நாதர்
மனம் மகிழ்ந்திட உடனிருக்கும் ஜெகதாம்பிகையே
மணம் கமழும் உனது மலரடி வந்துசேர மறுகும்
இம்மைந்தனைத் தை உத்திரத்தில் ஏற்று
அருள்புரிவாய் தாயம்மையே

இந்தப் பிறவியில் என் தனக்கு
எல்லாத் தெய்வங்களும் துணை நிற்பதால்
இனிமேல் எனக்குப்பிறவி இல்லை
என்று கூறத் துணிவுண்டு

வல்லிநாதரே நான் உமை வணங்குகிறேன்
அல்லற் படுத்தும் காமனை அழித்து நீர்
மல்லல் ஞாலத்து நான் பிறவாமல் தடுத்து
எல்லை இல்லதோர் ஆனந்தம் அளிப்பீர் இறையே

சாலை ஆண்டவர் என்ற முனிவர் இருந்தார் அவர்
அண்ணன் தியாகராஜாவுக்கு ஆன்ற தீட்சைகள்
அருளினார்
அனைவரும் முக்திஅடைய நன்னம்பிக்கை
வைப்பை அளித்தார்
அவரை வணங்கி நாம் கடைத்தேறுவோமே.

திருப்பதி வடமலையான் சீனிவாசா
தீராத வினைகளெல்லாம் தீர்ப்பாயே சீனிவாசா
தினம் தினமும் கோடி கோடி வசூல் செய்பாய் சீனிவாசா
சிறியேனைச் சீக்கிரமே உன்பாதம் சேர்த்திடுவாய்
சீனிவாசா

பழநிமலை வீற்றிருக்கும் ஆண்டிநின்னை
எனது பழ வினையால் உற்றிருக்கும் நோய்கள் தன்னைத்
தீர்த்திடவே வேண்டி நிற்கும் அடியேன் தன்னைச்
சீக்கிரமே உன் பாதம் சேர்த்திடுவாயே.

எங்கும் பரந்திருக்கும் குருவாயூரப்பன்
எடைக்கு எடை சர்க்கரை வாங்கும் குருவாயூரப்பன்
என்றும் எமைக்காக்க வந்த குருவாயூரப்பன்
எந்நாளும் உமை மறவாது வணங்குவன் யான்.

எங்கள் குலதெய்வம் கீழக்கோட்டை ஐயனார்
கண்ணங்குடியான் காளி கருப்பையா முன்னோடி
தொன்று தொட்டுக்காத்து வரும் எங்கள் தெய்வங்கள்
என்றென்றும் மறவாது நாங்கள் வணங்குகிறோமே

தாயம்மையே நினைச் சரணடைந்தேன்
தீர்த்திடுவாய் என் பாவங்களை
சேர்த்திடுவாய் நின்பதமலரில்
நான் வேண்டும் தை உத்திரத்தில்

சபரிமலை வீற்றிருக்கும் ஐயப்பா
சரணடைந்தேன் உனதுபத மலர் ஐயப்பா
சதா காலமும் உன் நினைவே என்மனதில் ஐயப்பா
சார்ந்திருக்க வேண்டுகின்றேன் அருள்புரிவாய் ஐயப்பா

ஆடி வெள்ளி முதற்கிழமை சந்தனக் காப்பு
ஆசையோடு நான் செய்ய அருள்புரிந்த அபயாம்பிகையே!

ஏதுக்காக இவ்வுலகில் இன்னும் என்னை
இருக்கச் செய்து பராமுகமாய் இருக்கின்றாயே?

யான் வேண்டும் தெய்வலோகம் சுபமரணம்
சீக்கிரமே தந்து உனது பதம் சேர்த்திடுவாயே.

வைரவா! வயிரவன் கோயில் வைரவா
எனை எக்காலும் காத்து நிற்கும் வயிரவா
வையகத்தில் நான் வாழ்ந்தது போதும் வைரவா
தெய்வலோகம் சுபமரணம் சீக்கிரமே அருள்புரிவாய் வயிரவா

விதியை வெல்வது மிகஅரிது
அவனை நல்லவனாக்குவது நம்செயலே
காமனை வெல்வதும் மிக அரிது
அவனை நல்லவனாக்குவது நம்மனமே

நபிகள் நாயகம் என்ற ஞானி
நாடும் உலகமும் நலமாய் வாழ
நல்ல அறிவுரைகள் நவின்றுள்ளாரே
நாமும் அவைகளைப் பின்பற்றி நலமாய் வாழ்வோமே

சிவந்தமேனி மிக்க அழகு எங்கள் தந்தை
சிரித்தாலே முத்துதிரும் எங்கள் தந்தை
சத்தியமாய் வாழ எமை வளர்த்த எங்கள் தந்தை
நித்தமும் நான் மறவாது வணங்குகிறேனே.

அரசமரத்து புண்ணியவதி உமையாள் ஆச்சி
அனுதினமும் பதிபாதம் தொட்டு வணங்கும் எங்கள்தாய்
அன்பாக எமைவளர்த்த எங்கள்தாய்
எந்நாளும் மறவாது நான் வணங்குகிறேனே.

என் தனக்கு முன்பிறந்த அண்ணன் தியாகராஜா
ஈர்இரண்டு வயதினிலே எனைக் காத்த அண்ணன்
தியாகராஜா
விண்ணுலகு எய்திய பின்னும் எனைமறவா
அண்ணன் தியாகராஜா
எந்நாளும் உமைவணங்குகிறேன் அண்ணன் தியாகராஜா

— ★ —

அனுபவம் பேசுகிறது

"பொற்கிழிக்கவிஞர்" அரு. சோமசுந்தரன் M.A.B.T.,

தேவகோட்டைப் பெரியவர் உயர்திரு ஏ. வி. வெங்கடாசலம் செட்டியார் அவர்கள் என் உறவினர் 20—10—1906இல் பிறந்து. தமது 85 வயதைக் கடந்து திடகாத்திரத்துடன் 86ஆவது வயதிலும் இயன்றபணிகளைச் செய்து கொண்டிருக்கும் அவர்கள் அழுத்தமான கல்விப் பயிற்சியும், ஆழ்ந்த தெய்வ நம்பிக்கையும், அரிய பல அனுப வங்களும் பெற்றவர்கள். தமிழிலும், ஆங்கிலத்திலும் நல்ல புலமை உடையவர்கள். இந்தியாவில் பல பெரிய முதலாளி களிடம் வேலைபார்த்த சிறப்பினை உடையவர்கள் தென் வியட்னாம் என்று இப்பொழுது நாம் சொல்லக்கூடிய செய்கோனில் பல ஆண்டுகள் பணியாற்றிய பெருமையினை பெற்றவர்கள். இரண்டாம் உலகப் போரின் கொடுமைகளை அனுபவித்தார்கள். ராஜாசர் அண்ணாமலைச் செட்டியார் ராஜாசர் முத்தையா செட்டியார் ஆகியோரை நன்கு

அறிந்தவர்கள். மகாத்மாகாந்தி அடிகளிடம் பாசமும்பற்றும் கொண்டவர்கள். இந்திய தேசீய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபாடு கொண்டு சேவை செய்தவர்கள் பட்டுக்கோட்டைப் பெரியவர். பாராளுமன்ற உறுப்பினர் ஆகிய நாடிமுத்துப் பிள்ளை அவர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த வர்கள்.

அவர்களோடு பல ஆண்டுகளாகப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர்கள் தாம் பெரிதும் இரசித்துப் படித்து ஈடுபட்ட பல பக்திப் பாடல்களை ஒரு நூலாகத் தொகுத்து வெளியிட விரும்பினார்கள். அந்த முயற்சியில் அவர்களது வாழ்க்கை வரலாற்றையும் சுருக்கமாக வெளியிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். ஏனென்றால் ஒருவரின் வாழ்க்கை வரலாறு மற்றவர்களுக்குப் பாடமாக அமையும். மேலும் கடந்த காலச் சந்ததிக்கும் நிகழ்காலச் சந்ததிக்கும் அது ஒரு பாலமாக அமையும். என்னுடைய வற்புறுத்தலுக்கு இசைந்து அவர்கள் தம் வாழ்க்கை வரலாற்றை இயன்றவரை நினைவுபடுத்தி எழுதி இருக்கிறார் கள்.

அதற்கு மேல் அவர்களை நான் 12—11—91 அன்று பல மணி நேரம் பேட்டி கண்டு நான் அறிந்த பல செய்தி களை இக்கட்டுரையில் தொகுத்து கொடுத்துள்ளேன். இதற்கு "அனுபவம் பேசுகிறது" என்று தலைப்புக் கொடுத் துள்ளேன். அவர்களது அனுபவங்கள் நமக்கெல்லாம் வழி காட்டட்டும்.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இரண்டாம் உலகப் போருக்கு முன்பு பிரெஞ்சு ஆட்சியில் இருந்த வளமான மூன்று நாடுகள் வியட்னாம், லாவோஸ், கம்போடியா ஆகும் வியட்னாம் பிறகு கம்யூனிஸ்ட்களின் பிடிப்பினால் தென் வியட்னாம் வடவியட்னாம் என்று இரண்டு நாடுகள் ஆகியது தென் வியட்னாமின் பழைய பெயர் Chochinchine

என்பதாகும் செய்கோன தலைநகரும் ஆகும். செய்கோனில் 1933 முதல் 1935 வரையும், பிறகு 1937 முதல் 39வரையும் கானாடுகாத்தான் எஸ். ஆர். எம். ஏ. ஆர். இராமநாதன் செட்டியார் கடையில் (வட்டிக் கடை) பணியாற்றும் வாய்ப்பு இந்நூலாசிரியர் திரு. A. V. வெங்கடாசலம் செட்டியார் அவர்களுக்குக் கிடைத்தது. அப்பொழுது அவர்களுக்கு மூன்றாண்டுச் சம்பளம் முதலில் சுமார் ரூபாய் ஏழாயிரம் பிறகு ரூபாய் பந்தாயிரத்து ஐநூறு ஆகும்.

1947-48 இந்தியா சுதந்திரம் அடைந்த காலத்தில் அவர்கள் கல்கத்தா டம்டம் விமான நிலையத்தில் இருந்து செய்கோன் விமான நிலையத்திற்கு விமானம் மூலம் பயணம் செய்திருக்கிறார்கள். காலை 7 மணிக்கு விமானத்தில் புறப்பட்டு பிற்பகல் 2 மணிக்கு செய்கோன் சென்றிருக்கிறார்கள். மணிக்கு ஐநூறு மைல் வேகத்தில் அப்பொழுது விமானம் பறந்திருக்கிறது. அப்பொழுது அவர்கள் செலுத்திய விமானக் கட்டணம் ரூ 200 மட்டுமே.

இதற்கு முன்பு அவர்கள் கப்பல் மூலமே செய்கோன் சென்றார்கள். தேவகோட்டை ரஸ்தாவில் இருந்து சென்னைக்குப் புகைவண்டி மூலம் பயணம். பிறகு அங்கிருந்து கப்பல் மூலம் செய்கோன் பயணம். சுமார் 6 நாளில் கப்பல் செய்கோன் போய்ச் சேரும். கப்பல் கட்டணம் ரூபாய் 90 மட்டுமே. இதைக் கேட்கும்பொழுது பழைய காலம் மீண்டும் வராதா என்று எண்ணத் தோன்றுகிறது.

தென் வியட்னாமை (செய்கோனை) அக்காலத்தில் கொச்சின் சைனா என்றும் அழைத்துள்ளனர். செய்கோனில் இருந்து சுமார் 180 மைலில் ''கந்தோ'' என்று ஒரு சிறு கிராமம். நல்ல வளமான ஊர். எங்கு பார்த்தாலும் நெல் வயல், ஆறு, கால்வாய், மரங்கள், எருமைமாடு, சிறுவீடுகள் வீடுகளில் இரண்டுவகை. ஒன்று செங்கல்லால் கட்டப்பெற்ற உறுதியான வீடுகள். மற்றொன்று பலகை வீடுகள் வியட்னாமிய மக்கள் எல்லாம் மிகவும் அன்புடையவர்கள்.

அதிலும் கிராம மக்கள் எல்லையற்ற அன்பும் பண்பும் உடையவர்கள். நல்ல மஞ்சள் நிறம்; உயர்ந்த மூக்கு, பார்க்க அழகாக இருப்பார்கள் இந்தியர்களிடம் ப்ரியமாக நடந்து கொள்வார்கள் அவர்கள் வீட்டுக்குப் போனால் சாப்பிடாமல் போகவிடமாட்டார்கள்.

கத்திரிக்காய், வெண்டைக்காய், புடலங்காய், மிளகாய், முருங்கைக்காய், கருணைக்கிழங்கு, ஆஸ்திரேலியா உருளைக்கிழங்கு, நெல் முதலியன அங்கு விளைவதால் நமது தமிழ்நாட்டுச் சாப்பாடு அங்குகிடைக்கும், "டொரியான்பழம்" என்று ஒருவகை ருசியான பழம் அங்கு நிறையக் கிடைக்கும். அது அப்பொழுது ஒரு பழம் விலை ரூபாய் ஒன்று. மற்றும் வாழைப்பழம், மாம்பழமும் அங்கு கிடைக்கும்.

செய்கோனில் இருந்து பல ஊர்களுக்கும் படகு மூலமே மக்கள் நதி, கால்வாய் வழியில் பயணம் செய்வர். அதுமிகவும் செலவு குறைவான பயணமாக இருந்தது. பஸ் போக்குவரத்து அதிகம் இல்லை. படகு செல்லாத ஊர்களுக்கு மக்கள் நடந்து தான் செல்வர்.

செய்கோனில் ஓடும் பெரிய ஆற்றுக்கு "மீகாங்" என்பது பெயர். அது கங்கை போல் ஒரு முக்கிய நதியாகும். இமயமலையில் அது உற்பத்தி ஆகி வருகிறது. அந்த நதி செய்கோனை வளப்படுத்துகிறது. செய்கோன் துறைமுகம் ஒரு நதியில் இருக்கிறது. அது கடற்கரையில் இருந்து உள்நாட்டில் 50 மைல் தொலைவில் ரங்கூன் போல் அமைந்துள்ளது பர்மாவில் ரங்கூன் கடற்கரையில் இருந்து பலமைல் தொலைவில் ஐராவதி நதியில் அமைந்துள்ளது அல்லவா? அதுபோல் தான் செய்கோனும்.

மக்கள் கருப்புத் துணியில் சட்டை அணிந்துகொள்வர் மஞ்சள் நிறம் உடைய மக்கள் கருப்புத்துணி அணிந்துவரும் போது எடுப்பாக இருக்கும். மக்கள் கள்ளம் கபடம் அற்றவர்

கள் அவர்களது கடனுக்காக அவர்களது நிலத்தை ஜப்தி செய்யச் சென்றால் கூட அவர்கள், வருபவர்களைவரவேற்று உபசரித்து, தமது நிலத்தின் எல்லைகளைக் காட்டுவார்களாம். ஜப்தி செய்கிறார்களே என்று ஆத்திரப்படமாட்டார்களாம். எதிர்க்கமாட்டார்களாம். நிலத்தை ஜப்தி செய்தால் வீட்டுக் கொடுத்து விடுவார்களாம். பிறகு அதே நிலத்தில் குத்தகைக்கு வேலை செய்வார்களாம்.

புத்தமதமும் கிறிஸ்துவ மதமும் செய்கோனில் இருந்தன. பிரெஞ்சு ஆட்சி நடைபெற்றது. பிரெஞ்சுக்காரர்கள். அதிகாரிகள் ஆட்சியாளர்கள். பாதிரிகள் அனைவரும் கிறிஸ்துவ மதத்தை சேர்த்தனர் ஒருமுறை ஒரு கிறிஸ்தவப் பாதிரிகள் வெங்கடாசலம் செட்டியாரின் முதலாளி வீட்டு நெல் குத்தகையை விலைக்கு வாங்கினார். நல்ல விலை கொடுத்து வாங்கினார் எதற்கு வாங்குகிறார் என்று கேட்ட பொழுது கிராம மக்களின் முன்னேற்றத்திற்கு அதனை உபயோகப்படுத்துவதற்கு என்று சொல்லி இருக்கிறார்.

கிராமங்களில் எருமைமாடு மிகுதி. கொசு அதைவிட மிகுதி. கொசுவலை இல்லாமல் மக்கள் படுக்க முடியாது. கொசுக்கடியல் எருமை மாடுகள் ஆரோக்கியம் இழக்கக் கூடாது என்பதற்காக எருமை மாடுகளுக்கும் கொசுவலை கட்டுவார்களாம் நம் நாட்டில் மக்கள் கொசுக்கடியில் அவதிப் படுவதைப் பார்க்கும் பொழுது செய்கோனின் எருமைமாட்டைவிட நாம் மோசமாகப் போய்விட்டோமோ என்று எண்ண வேண்டி இருக்கிறது.

செய்கோனில் அப்பொழுது நகரத்தார்களின் வட்டிக் கடைகள் (Bank) சுமார் 50 இருந்தன. மற்றும் பக்ளியூ, சொக்த்ரான், ரஜியா, வில்யம். பெந்த்ரே, கந்தோ முதலிய கிராமங்களில் நகரத்தார் கடைகள் இருந்தன. அவற்றில் "கந்தோ" என்ற கிராமத்தில் இருந்த ஒரு கடையில் திரு. வெங்கடாசலம் செட்டியார் வேலை பார்த்தார் மனைவி

மக்களை விட்டுப் பிரிந்து 3500 மைல்களுக்கு அப்பால் ஒரு சிறிய கிராமத்தில் தனியே வேலைபார்க்கத் தைரியம் வேண்டும். அதற்கு மேல் கடவுள் அருள் வேண்டும்.

செய்கோனில் மக்கள் பேசும் மொழிக்கு "அன்னாம்" என்பது பெயர். அரசாங்க மொழி பிரெஞ்சு ஆகும். திரு. வெங்கடாசலம் செட்டியார் அவர்கள் மேற்படி இரண்டு மொழிகளையும் நன்கு பேசக் கற்றுக் கொண்டதால் பொருள் தேடும் பணியில் அவர்களால் வெற்றிபெற முடிந்தது.

செய்கோனில் பள்ளிக் கூடங்கள் எல்லாம் ஊருக்குக் கடைசியில் உள்ளன. பள்ளிக்கூடத்திற்குப் பிள்ளைகள் அனைவரும் நன்கு உடையணிந்து, வரிசையாகச் செல்வர். வீதிகள் எல்லாம் வரிசை வரிசையாக சீராக,நேராக இருக்கும் சுத்தமாக இருக்கும். வீடுகளுக்கு முன்னால் குரோட்டஸ் செடிகள் இருக்கும். ஊரே பாப்பதற்கு அழகாகக் காட்சி தரும்.

மக்கள் பெருஞ்பகுதி விவசாயம் செய்கின்றனர். வயல்களில் எருமைமாடுகளைக் கொண்டு உழுவர். விளையும் நெல்லைச் சீன வியாபாரிகள் கொள்முதல் செய்வர். எவ்வளவு நெல் விற்கப்பட்டிருக்கிறதோ அந்த அளவைக் குறித்துக் கொடுப்பர். எப்பொழுது தொகை கேட்கிறோமோ அப்பொழுது உள்ள நிலவரப்படியான விலையினை சீன வியாபாரிகள் தருவர். இது ஒரு நல்ல முறை விவசாயிகள் நெல்லைப் பாதுகாக்க வேண்டியதில்லை வியாபாரிகள் அதைச்செய்கின்றனர். விவசாயி விரும்பினால் விலை ஏறும் காலம்வரை காத்திருந்து அந்த விளையினைப் பெறலாம். நம்நாட்டில் அப்படியில்லாதது விவசாயிகளுக்கு ஒரு பெரும் குறையே ஆகும்.

திரு. வெங்கடாசலம் செட்டியார் அவர்கள் செய்கோனில் வாழ்ந்த காலத்தில் அங்கிருந்த பிரெஞ்சு

கவர்னர் ஜெனரல் பெயர் ராபின் என்பதாகும். அப்பெயரை ருபான் என்று பிரெஞ்சில் சொல்வர். வெங்கடாசலம் செட்டியார் வாழ்ந்த செய்கோன் வீதிக்குப்பெயர் ருய்ஒய்யே என்பதாகும். சில பிரெஞ்சுக்காரர்கள் பெயர் வருமாறு: விசிறி, இடில், லிமே.

செய்கோனில் அப்பொழுது இருந்த இந்திய கான்சல் (தூதுவர்) பெயர் மேத்தா என்பதாகும். செய்கோனில் சுமார் 50 கடை நகரத்தார்கள் வாழ்ந்தனர். கந்தோவில் 7 கடை பேர் வாழ்ந்தனர். மற்ற ஊர்களிலும் கடைகள் இருந்தன. இவர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு சங்கம் வைத்திருந்தனர் அச்சங்கத்திற்கு திரு. வெங்கடாசலம் செட்டியார் 1948ல் தலைவராக இருந்தார். இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு, முன்பு ஜவகர்லால் நேரு அவர்கள் செய்கோனுக்கு வருகை புரிந்த பொழுது நகரத்தார் சங்கத்தின் சார்பில் வரவேற்புக் கொடுக்கப்பட்டது அந்த வரவேற்பை ஏற்று ஜவகர்லால் நேரு ஆற்றிய உரையை நாடே போற்றியது செய்கோனில் இருந்து ஜவகர்லால் நேரு ஷியாங்கேஷேக்கைச் சந்திக்கப் போனார்.

செட்டிநாடு அரசர் திரு டாக்டர் ராஜாசர் அண்ணாமலை செட்டியார் தொழிலதிபர் திரு ஏ.எம். எம். முருகப்ப செட்டியார் ஆகியோர் 1937 இல் செய்கோனுக்கு வருகை தந்தனர். அப்பொழுதும் நகரத்தார் சங்கம் அவர்களுக்கு வரவேற்புக் கொடுத்தது.

1948 ஆம் ஆண்டில் இந்தியாவில் இருந்து செய்கோனுக்குச் சென்ற "நல்லெண்ணத் தூதுக்குழு"வுக்கு பட்டுக்கோட்டைப் பெரியவர் திரு. நாடி முத்துப்பிள்ளை M P. அவர்கள் தலைமை தாங்கினார்கள். அக்குழுவில் திரு. வெங்கடாசலம் செட்டியார் அவர்களும் ஓர் உறுப்பினராக இடம் பெற்றார்கள். மற்ற மூன்று உறுப்பினர்கள் ஜனாப் ஜே. எம். அப்துல் அசீஸ் எம். ஈஹமீத்மரைக்காயர்

டி. எஸ். சுப்பிரமணியம் பிள்ளை ஆவர் இவர்கள் 1948 பிப்ரவரி-மார்ச்சில் செய்கோன் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து ஒரு விரிவான அறிக்கையை நம் பாரதப் பிரதமர் திரு ஜவகர்லால் நேருவுக்கு அனுப்பினர். அந்த அறிக்கை ஆங்கிலத்தில் 1948ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டுள்ளது.

இக்குழுவின் உறுப்பினர்களுள் ஒருவரான திரு அப்துல் அசீஸ் என்பவர் கூத்தாநல்லூரைச் சேர்ந்தவர் இவருக்கு செய்கோனில் ரூயி கதினா என்ற வீதியில் கடை உண்டு. இவர் திரு வெங்கடாசலம் செட்டியாரின் இனிய நண்பர். இருவரும் இந்து-முஸ்லிமாக இருந்தாலும் மத வேறுபாடு இல்லாமல் ஒற்றுமையாக வாழ்ந்து இந்தியப்பணி புரிந்திருக்கிறார்கள்.

செய்கோன் தலைநகரஜனத்தொகை சுமார்3இலட்சம் செய்கோனில் சுப்பிரமணிய சுவாமி கோயில் நகரத்தார் களால் கட்டடப்பட்டது. அங்கு நிறை வெள்ளி, தங்க வயிர ஆபரணங்கள் உண்டு. தைப்பூசத்தின் பொழுது முருகப் பெருமான் வெள்ளி மயில்வாகனத்தில் உலா வருவார் எல்லா மக்களும் அவரைப் பக்தி சிரத்தையோடு வணங்குவர் செய்கோனில் மாரியம்மன் கோயில் ஒன்றும் உண்டு.

அக்காலத்தில் நகரத்தார்கள் தம் மனைவியை வெளி நாட்டுக்கு அழைத்துச் செல்லும் பழக்கம் அதிகம் இல்லை அந்தச் சூழ்நிலையில் கீழச்சீவல்பட்டி நகரத்தார் ஒருவர் தம் மனைவியைச் செய்கோனுக்குத் தைரியமாக அழைத்து வந்திருந்தாராம் அதைப் பெரிய சீர்த்திருத்தமாக அக்காலத் தில் பேசினார்கள்.

செய்கோன் தையற்காரர்கள் மிகவும் திறமை சாலிகள் திரு வெங்கடாசலம் செட்டியாருக்கு 1938ல் தைத்த சட்டையை 1962ல் டெல்லியில் உள்ள தையல்காரர்

பார்த்து ஆச்சரியப்பட்டார் அவ்வளவு அழகாக தைத்திருந்தது.

1947-48இல் செய்கோனில் உள்நாட்டுக் கலவரம் நடந்த நேரத்தில் திரு. வெங்கடாசலம் செட்டியார் இராணுவ வண்டி சென்ற பொழுது அவ்வண்டியின் துணையோடு (Convors) செய்கோனில் இருந்து கந்தோவும் கந்தோவில் இருந்து செய்கோனுக்கும் பயணம் செய்வதுண்டாம் அப்படி ஒரு முறை மந்திரி ஒருவர் வண்டியில் பயணம் செய்த பொழுது கிளர்ச்சிக்காரர்கள் திடீரென்று சுட ஆரம்பித்தனராம் உடனே இராணுவம் திருப்பிச் சுட ஆரம்பித்ததாம், வெங்கடாசலம் செட்டியாரும் மந்திரி அவர் மனைவி உள்பட எல்லாரும் தரையில் படுத்துக் கொண்டாராம் சிறிது நேரத்தில் யுத்தம் முடிந்ததாம். கிளர்ச்சிக்காரர்கள் செத்தவர் போக மீதிப்பேர் ஓடிவிட்டனராம். பிறகு பயணம். தொடர்ந்ததாம். இந்த நிலை அப்பொழுது அங்கு சர்வ சாதாரணமாம் அதுபோன்ற நிலை இப்பொழுதுஇந்தியாவில் வந்து கொண்டிருக்கிறதோஎன்று எண்ணத் தோன்றுகிறது.

செய்கோன் நாணயத்திற்கு பியாசர் Piaster என்று பெயர். அது 100சென்ட் ஆகும். செய்கோன் நாணயம் 100 வெள்ளிக்கு ரூ175 அக்காலத்தில் (1935ல்), 1936 கணக்கு செய்யப்பட்டதாம்.

திரு வெங்கடாசலம் செடடியார் கம்போடியாவில் உள்ள அங்கோர்வாட் கோயிலைப் பார்த்திருக்கிறார். அது புகழ்பெற்ற இந்துக் கோயிலாகும். தஞ்சைப் பெருங் கோயிலைப் போல அது ஒரு பெரிய கோயிலாகும். அங்கு இராமர் சரித்திரம் கல்வெட்டில் பிம்பமாகச்செதுக்கப்பட்டிருப்பது கண்கொள்ளாக் காட்சியாகும்.

திரு. வெங்கடாசலம்செட்டியார் கம்போடியாபாங்காக் மலேசியா-பினாங்கு வழியாக நாகப்பட்டிணத்திற்கு கப்பல்

மூலம் வந்து தேவகோட்டையினை அடைந்திருக்கிறார். அப்பொழுது கம்போடியாவில் அங்கோர்வாட், தாய்லாந்தின் தலைநகரான பாங்காக் மலேசியாவில் பினாங்குத் துறைமுகம் அனைத்தும் பார்த்து வியந்திருக்கிறார். அவர் கண்ட அந்த நாடுகளைப் போல நம் நாடும் முன்னேற் என்று ஆசைப்படுகிறார்.

அவருக்கு 15 வயதில் திருமணம் ஆயிற்று இப்பொழுது வயது 86. கடந்த 71 ஆண்டுகளாக மிக அன்போடு அவர் தம் மனைவியுடன் சிறப்பாக வாழ்ந்து வருவது அனைவரும் பின் பற்ற வேண்டிய வாழ்க்கை முறையாகும். அவர்களது மைந்தர் திரு. செந்தில்நாதன் செட்டியார் அவர்கள் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார்கள். தந்தையார்க்கு ஏற்ற சத்புத்திரர். இப்படி ஒரு குடும்பத்தைப் பார்ப்பது இக்காலத்தில் அரிதாக இருக்கிறது. "நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்" ஆகும். இப்பல்கலைக் கழகமாகிய நல்ல குடும்பத்தின் சீரிய முயற்சியால் இந்நூல் வெளிவருகிறது. இது நாட்டுக்கும் மக்களுக்கும் பயன்பட வேண்டும் என்பதே என் பிரார்த்தனை.

பக்திப்பாடல்கள்

விநாயகர் துதி

கலைநிறை கணபதி சரணம் சரணம்
கஜமுக குணபதி சரணம் சரணம்
தலைவநின் இணையடி சரணம் சரணம்
சரவணபவகுவ சரணம் சரணம்
சிவமலை யுடையவ சரணம் சரணம்
சிவசிவ சிவசிவ சரணம் சரணம்
உலைவறு மொருபரை சரணம் சரணம்
உமைசிவை யம்பிகை சரணம் சரணம்

முருகன் துதி

முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே — ஒரு கை முகன்
தம்பியே உன்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கை தொழுவேன் நான்

சிவன் துதி

உலகெலாம் உணர்ந்து ஓதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவன்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

அம்பிகை தோத்திரம்

பரந்தமலர் கருங்குழலும் செவ்வாயும்
வெண்ணகையும் பசு வேய்ந்தோளும்
சுரந்த அருள் பொழியும் இரு விழியும் எழில்
வழி முகமும் துணைப் பொற்றோடும்
கரந்த திரு இடையும் ஒண்செம் பட்டுடையும்
மங்கலப் பொற்கழுத்தும் நாளும்
இரந்தவருக்கு அருள் அஞ்சல் நாயகி நூ
புரப்பதமும் இறைஞ்சி வாழ்வாம்.

பராசக்தி

மாதா பராசக்தி வையமெலாம் நீ நிறைந்தாய்!
ஆதார முன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே!
ஏதாயினும் வழி நீ சொல்வாய், எமதுயிரே!
வேதாவின் தாயே! மிகப்பணிந்து வாழ்வோமே.

கலைவாணி

வாணி கலைத்தெய்வம் மணிவாக்குதவிடுவாள்
ஆணி முத்தைப் போலே அறிவு முத்து மாலையினாள்
காணுகின்ற காட்சியாய் காண்பதெல்லாங் காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே

ஸ்ரீ தேவி

பொன்னரசி, நாரணனார் தேவி, புகழரசி
மின்னு நவரத்தினம் போல் மேனியழகுடையாள்
அன்னையவள் வையமெலாம் ஆதரிப்பாள் ஸ்ரீதேவி
தன்னிரு பொற்றாளே சரண்புகுந்து வாழ்வோமே

பார்வதி தேவி

மலையிலேதான் பிறந்தாள், சங்கரனை மாலையிட்டாள்
உலையிலே ஊதி உலகக்கனல் வளர்ப்பாள்
நிலையிலே உயர்த்திடுவாள் நேரே அவள் பாதம்
தலையிலே தாங்கித் தரணியிசை வாழ்வோமே

திருமால் துதி

உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே

ஆஞ்சநேயர் துதி

அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத்தாவி
அஞ்சிலே ஒன்றாறாக ஆரியர்க்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன் நம்மை
அளித்துக் காப்பான்.

பைரவக் கடவுள்

பரமனை மதித்திடாப் பங்கயாசனன்
ஒருதலைக்கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியுமகந்தையும் கொண்டு தண்டமுன்
புரிதருவடுகனைப் போற்றி செய்குவாம்.

வெஞ்சினப் பரியழகன் மீது போர்த்திடும்
அஞ்சனப் புகையென ஆலமாமெனச்
செஞ்சுடர்ப் படிவமேற் செறிந்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள் பொற் கழல்கள் ஏத்துவாம்

மகாசக்திக்கு சமர்ப்பணம்

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்
பண்ணிய பாவ மெல்லாம்
பரிதி முன் பனியே போல
நண்ணிய நின் முனிங்கு
நசித்திடல் வேண்டு மன்னாய்

சண்டேசர்

வெள்ளியங் கடவுள் ஓதிமந் தேட
மிளிர் முடிக் காட்டிடை நாகம்
பள்ளியன் காத்த பசுங்குலங் கறந்த
பாற்கலசங்களைத் தாளால்
தள்ளிய தாதை வெய்யதாள் இணையைத்
தடிந்தொரு மடந்தை பங்காளன்
ஒள்ளிய கமலத் திருவடி நீழல்
ஒன்றினோன் அடிபணிந்துய்வாம்.

நால்வர் துதி

பூழியர் கோன்வெப்பொழித்த புகழியர் கோன் கழல்போற்றி
ஆழிமிசைக்கல் மிதப்பில் அணைந்த பிரான் அடிபோற்றி
வாழிதிருநாவலூர் வன்தொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி போற்றி

— ❋ —

தேவாரம்

திருவேதிகுடி

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

நீறுவரியாடர வொடாமை மனவென்பு நிரைபூண்பரிடபம்
ஏறுவரியா வருமிறைஞ் சுகழலாதியரிருந்த விடமாம்
தாறுவிரிபூக மலிவாழை விரைநாற விணைவாளை [2] மடுவில்
வேறுபிரியாது விளையாட வளமாரும் வயல்வேதிகுடியே 1

சொற்பிரிவிலாத மறைபாடி நடமாடுவர் தொலாணை யுரிவை
மற்புரியத் தினிதுமேவு வரெந்நாளும் வளர்வானவர் தொழத்
துற்பரிய நஞ்சமுகமாக [3] முனயின்ற வரியன்ற தொகுசீர்
வெற்பரையன் மங்கையொரு பங்கர் நகரென்பர் திருவேதி
குடியே 2

போழுமதி பூணரவு கொன்றை மலர்துன்று சடைவென்றி
புகமேல்
வாழுநகிதாழு மருளாளரிருளார்மிடறர் மாதரிமையோர்
சூழுமிரவாளர் திருமார்பில் விரிநூலர்வரி தோலருடைமேல்
வேழவுரி போர்வையினர் மேவுபதியென்பர் திருவேதிகுடியே

காடர் கரிகாலர் கனல் கையரனன் மெய்யருடல் செய்யர்
தோடர் தெரிதீளர் சரிகோவணவரா உணவர். Lசெவியில்
Lதொல்லை நகர் தான்
பாடலுடையார் களடியார் கண்மலரோடு புனல் கொண்டு
பணிவார்
வேடமொளியரன பொடிபூசியிசை மேவு திருவேதிகுடியே

சொக்கன் துணைமிக்க வெயிலுக்கற முனிந்து தொழுழவர்
மகிழத்
தக்கவருள் பக்க முறவைத் தவரனாரினிது தங்குநகர் தான்
கொக்கருவமுற்ற பொழில் வெற்றிநிழல் பற்றி வரிவண்டிசை
குலாம்
மிக்கமரர் மெச்சியினி தச்சமிடர் போக நல்குவேதிகுடியே.

செய்யதிருமேனிமிசை வெண்பொடியணிந்து கருமானுரிவை
போர்த்
தையமிடுமென்று மடமங்கையொட கந்தரியு மண்ணலிடமாம்
வையம் விலைமாறிடினுமேறு புகழ்மிக்கிழி விலாதவகையார்
வெய்யமொழி தண்புலவருக்குரை செயாதவவர்வேதிகுடியே.

உன்னியிருபோது மடிபேணுமடியார் தமிரரொல்கவருளித்
துன்னியொரு நால்வருடனானிழலிருந்த துணைவன்றனிட
மாம்
கன்னியரொடாடவர் கண்மாமணம் விரும்பியருமங்கலமிக
மின்னியலுறுண்ணிடை நன்மங்கையரியற்று பதிவேதிகுடியே

உரக்கற நெருப்பெழ நெருக்கிவரை பற்றியவொருத்தன்
முடிதோள்
அரக்கனையடர்த்தவனிசைக்கினிது நல்கியருளங்கணனிடம்
முருக்கிதழ்மடக்கொடிமடந்தையருமாட வருமொய்ந்
தகலவை
விரைக்குழன்மிகக் கமழ வின்னிசையுலாவு திருவேதிகுடியே.

பூவின்மிசையந்தணனோடழிபொலியங்கையனுநேடவரியாய்
தேவுமிவரல்லரினியாவரென நின்று திகழ்கின்றவரிடம்
பாவலர்களோசையியல் கேள்விய தறாத கொடையாளர்
பயில்வாம்
மேவரிய செல்வநெடுமாடம் வளர்வீதி நகழ்வேதிகுடியே

வஞ்சமணர்தேரர்மதிகேடர் தமனத்தறிவிலாதவர் மொழி
தஞ்சமெனவென்று முணராதவடியார் கருதுசைவனிடமாம்
அஞ்சுபுலன்வென்றறுபொருட்டெரிந்தெழுவிசைக்
கிளவியால்
வெஞ்சினமொழித்தவர் கண்மேவி நிகழ்கின்ற திருவேதி
குடியே

கந்தமலிதண்பொழினன்மாடமிடைகாழிவளர்ஞானமுணர்சம்
பந்தன்மலி செந்தமிழன் மாலை கொடுவேதிகுடியாதிகழலே
சிந்தைசெயவல்லவர் கணல்லவர்களென்ன நிகழ்வெய்
தியிமையோர்
அந்தவுல கெய்தியரசாளு மதுவேசரதமாணை நமதே.

— ❋ —

தேவாரம்

திருப்பிரமபுரம்

மடன்மலி கொன்றைதுன்று வாளெடுக்கும்
வன்னியுமத்த முஞ்சடைமேற்
படலொலிதிரை கண் மோதிய கங்கைத்
தலைவனார் தம் மிடம் பகரில்
விடலொலி பரந்த வெண்டிரை முத்த
மிப்பிகள் கொணர்ந்து வெள்ளருவிக்
கடலொலியோ தமோதவந் தலைக்குங்
கழுமல நகரெனலாமே 1

மின்னிய வரவும் வெறிமலர் பலவும்
விரும்பிய திங்களுந் தங்கு
சென்னியதுடை யான்றேவர் தம் பெருமான்
சேயிழையொடு முறை விடாம்
பொன்னியன் மணியு முரிகரி மருப்புஞ்
சந்தமுந்து வன்றி ரைகள்
கன்னியராடக் கடலொலி மலியுங்
கழுமல நகரெனலாமே. 2

சீருறு தொண்டர் கொண்டடி போற்றச்
செழுமலர் புனலொடு தூபந்
தாருறு கொன்றை தம் முடிவைத்த
சைவனார் தங்கிட மெங்கும்
ஊருறு பதிகளுலகுடன் பொங்கி
யொலிபுனல் கொளவுடன் மிதந்த
காருறு செம்மை நன்மையான் மிக்க
கழுமல நகரெனலாமே. 3

மண்ணினுரேத்த வானுளார் பரச
வந்தரத்தமரர்கள் போற்றப்
பண்ணினா ரெல்லாம் பலபலவேட
முடையவர் பயில்விட மெங்கும்
எண்ணினான் மிக்காரியல் பினானிறைந்தா
ரேந்திழையவரொடு மைந்தர்
கண்ணினாலின் பங்கண்டொளி பரக்குங்
கழுமல நகரெனலாமே. 4

சுருதியான்தலையு நாமகண் மூக்குஞ்
சுடரவன் கரமு முன்னியங்கு
பரிதியான் பல்லுமிறுத்தவர்க் கருளும்
பரமனார் பயின்றினிதிருக்கை
விருதினான் மறையுமங்கமோராறும்
வேள்வியும் வேட்டவர் ஞானங்
கருதினாருலகிற் கருத்துடையார்சேர்
கழுமல நகரெனலாமே. 5

புற்றில் வாளரவு மாமையும் பூண்ட
புநிதனார் பனிமலர்க் கொன்றை
பற்றிவான் மதியஞ்சடையிடை வைத்த
படிறனார் பயின்றினி திருக்கை
செற்றுவன்றிரை களொன்றொடொன்றோடிச்
செயிர்த்துவண் சங்கொடு வங்கங்
கற்றுறை வரைகள் கரைக்கு வந்துரைக்குங்
கழுமல நகரெனலாமே. 6

அலைபுனற்கங்கை தங்கிய சடையா
ரடனெடு மதிலொரு மூன்றுங்
கொலையிடைச் செந்தீவெந்தறக் கண்ட
குழகனார் கோயிலதென்பர்
மலையின் மிக்குயர்ந்தகரக்கலஞ் சரக்கு
மற்று மற்றிடையிடையெங்குங்
கலைகளித்தேறிக் கானலில் வாழுங்
கழுமல நகரெனலாமே 7

ஒருக்க முன்னினையாத் தக்கன்றன் வேள்வி
யுடைதரவுழறிய படையார்
அரக்கனை வரையாலாற்றலன்றழித்த
வழகனாரமர்ந்துறை கோயில்
பரக்கும் வண்புகழார் பழியவை பார்த்துப்
பலபல வறங்களே பயிற்றிக்
கரக்கு மாறறியா வண்மையால் வாழுங்
கழுமல நகரெனலாமே 8

அருவரை பொறுத்த வாற்றலினானு
மணிகிளர் தாமரையானும்
இருவருமேத்த வெரியுருவான
விறைவனாருறைவிடம் வினவில்
ஒருவரிவ்வுலகில் வாழ்கிலா வண்ணம்
ஒலிபுனல் வெள்ள முன்பரப்பக்
கருவரை சூழ்ந்த கடலிடைமிதக்குங்
கழுமல நகரெனலாமே. 9

உரிந்துயருருவிலுடை தவிர்ந்தாரு
மத்துகில் போர்த்துழல் வாருத்
தெரிந்து புன்மொழிகள் செப்பினகேளாச்
செம்மையார் நன்மையாலுறைவாங்
குருந்துயர் கோங்கு கொடி விடுமுல்லை
மல்லிகை சண்பகம் வேங்கை
கருந்தடங் கண்ணின் மங்கைமார் கொய்யுங்
கழுமல நகரெனலாமே. 10

கானலங் கழனியோ தம் வந்துலவுங்
கழுமலநகருறைவார் மேல்
ஞானசம் பந்தனற்றமிழ் மாலை
நன்மையாலுரை செய்து நவில்வார்
ஊனசம்பந்தத்துறுபிணி நீங்கி
யுள்ளமுசிமாருவழிக் கொண்டு
வானிடை வாழ்வர் மண்மிசைப்பிறவார்
மற்றிதற்காணையு நமதே 11

— ❋ —

திருவெங்குரு

காலை நன்மாமலர் கொண்டடி பரவிக்
கைதொழுமாணியைக் கறுத்த வெங்காலன்
ஓலமதிட முன்னுயிரொடுமாள
உதைத்தவனுமையவள் விருப்பனெம் பெருமான்
மாலை வந்தணுகவோ தம் வந்துலவி
மறிதிரை சங்கொடுபவள முனுந்தி
வேலை வந்தணையுஞ் சோலைகள் சூழ்ந்த
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே 1

பெண்ணினைப்பாகமமர்ந்து செஞ்சடைமேற்
பிறையொடு மரவினை யணிந்தழகாகப்
பண்ணினைப் பாடியாடி முன்பலிகொள்
பரமரெம்மடிகளார் பரிசுகள் பேணி
மண்ணினை மூடிவான் முகடேறி
மறுதிரை கடன் முகந்தெடுப்பமற்றுயர்ந்து
விண்ணள வோங்கி வந்திழிகோயில்
வெங்குரு மேவியுள் வீற்றிந்தாரே 2

ஓரியல்பில்லா வுருவமதாகி
யொண்டிறல் வேடன துருவது கொண்டு
காரிகை காணத்தனஞ்சயன்றன்னைக்
கறுத்தவற்களித்துடன் காதல் செய்பெருமான்
நேரிசையாக வறுபதமுரன்று
நிரைமலர்த்தாது கண்மூசவிண்டுதிர்ந்து
வேரிகளெங்கும் விம்மியசோலை
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே

வண்டணை கொன்றை வன்னியுமத்த
மருவியகூவிளமெருக் கொடுமிக்க
கொண்டணிசடையர் விடையினர் பூதங்
கொடுகொட்டிகுடமுழாக் கூடியுமுழவப்
பண்டிகழ்வாகப் பாடியொர்வேதம்
பயில்வர் முன்பாய் புனற்கங்கையைச் சடைமேல்
வெண்பிறை சூடியு மைய வளோடும்
வெங்குரு மேவியுள் வீற்றிருந்தாரே 4

சடையனர் மேனி நீறது பூசித்
தக்கைகொள் பொக்கண மிட்டு டனாகக்
கடைதொறும் வந்து பலியது கொண்டு
கண்டவர் மனமவை கவர்ந்த ழகாகப்
படையது வேந்திப் பைங்கயற் கண்ணி
யுமையவள் பாகமுமர்ந் தருள செய்து
விடையொடு பூதஞ்சூழ்தரச் சென்று
வெங்குரு மேவியுள் வீற்றிருந்தாரே 5

கரைபொரு கடலிற்றி ரையது மோதக்
கங்குல் வந்தேறிய சங்க முமிப்பி
உரையுடை முத்த மணலிடை வைகி
யோங்கு வானிருளறத் துரப்ப வெண்டிசையும்
புரைமலிவேதம் போற்று பூசுரர்கள்
புரிந்தவர் நலங்கொளா குதியினிறைந்த
விரைமலி தூபம விசும்பினை மறைக்கும்
வெங்குரு மேவியுள் வீற்றிருந்தாரே 6

வல்லி நுண்ணிடையாளு மைய வடன்னை
மறுகிட வருமத களிற்றினை மயங்க
ஒல்லையிற் பிடித்தங் குரித்தவள் வெருவல்
கெடுத்தவர் விரிபொழின் மிகுதிருவாலில்

நல்லறமுரைத்து ஞான மோடிருப்ப
நலிந்திடலுற்ற வந்த கருப்பு
வல்லியைப் பொடிபட விழித்தவர் வி ம்பி
வெங்குருமேவியுள் வீற்றிருந் ர

பாங்கிலா வரக்கண்கயிலையன் றெடுப்பப்
பலதலை முடியோடு தோளவை நெரிய
ஓங்கிய விரலலூன்றியன்றவற்கே
யொளி திகழ்வானது கொடுத்தழகாய
கோங்கொடு செருந்திகூவிளமத்தங்
கொன்றையுங்குலாவிய செஞ்சடைச் செல்வர்
வேங்கைபொன் மலரார் விரைதரு கோயில்
வெங்குருமே வியுள் வீற்றிருந் தாரே

ஆறுடைச் சடையெம் மடிகளைக் காண
அரியொடு பிரமனு மளப்பதற் காகிச்
சேறிடைத் திகழ்வானத் திடைபுக்குஞ்
செலவறத் தவிர்ந்தன ரெழிலுடைத் திகழ்வெண்
ணீறுடைக் கோல மேனியர் நெற்றிக்
கண்ணினர் விண்ணவர் கை தொழுதேத்த
வேறெமையாள விரும்பிய விகிர் தர்
வெங்குரு மேவியுள் வீற்றிருந் தாரே.

பாடுடைக் குண்டர் சாக்கியர் சமணர்
பயிறரு மறவுரை விட்டழகாக
ஏடுடை மலராள் பொருட்டு வன்றக்க
னெல்லையில் வேள்வியைத் தகர்த்தருள் செய்து
காடிடைக் கடிநாய் கலந்துடன் சூழக்
கண்டவர் வெருவுற விளித்து வெய்தாய
வேடுடைக் கோலம் விரும்பி விகிர்தர்
வெங்குருமே வியுள் வீற்றிருந்தாரே

விண்ணியல் விமானம் விரும்பிய பெருமான்
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரை
நண்ணிய நூலன் ஞான சம்பந்தன்
நவின்றவிவ்வாய் மொழி நலமிகுபத்தும்
பண்ணியல் பாகப் பத்திமையாலே
பாடியுமாடியுப் பயில வல்லோர்கள்
விண்ணவர் விமானங்கொடு வரவேறி
வியனுலகாண்டு வீற்றிருப்பவர் தாமே